Registered as a News Paper in Sri Lanka        பக்கங்கள்: 06        விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM    PEOPLES DAILY • மக்கள் தினசரி •

நாதம் 01    பிரமோதூத ஸ்ரீ வைகாசி மீ 28ஆம் உ    திங்கட்கிழமை    (11 - 06 - 1990)    ஹிஜ்ரி 1410    ஜுல்ஹஜ் 17    ஓசை 113

## வெள்ளை அரிசியில் நச்சுத்தன்மை பாவிக்க வேண்டாம் என்று எச்சரிக்கை

(கொழும்பு)

மருந்துவ ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த சிரேஷ்ட போஷாக்கு நிபுணர் வெள்ளைச் சீனி, பாண், வெள்ளை அரிசிச் சோறு ஆகியவற்றை உணவாகக் கொள்ளவேண்டாம் என்று பொதுமக்களை எச்சரித்துள்ளார்.

சீனி, பாண், வெள்ளை அரிசியில் அவ்றோரொக்ஸ்ரயின் என்ற இரசாயனம் கலந்திருப்பதாகவும், அது நச்சுத்தன்மை கொண்டதென்றும், உடம்புக்குக் கேடு விளைவிக்கக் கூடியதென்றும் வைத்திய கலாநிதி பியட்ரிஸ் டி மெல் தெரிவித்தார்.

உடல் வளர்ச்சிக்குத் தேவையான பொஸ்பரஸ், கல்சியம் ஆகிய ஊட்டச் சத்துக்கள் இவ்வுணவுப்பண்டங்களில் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

வெள்ளைச் சீனி, வெள்ளை அரிசியால் ஆக்கப் (6 ஆம் பக்கம் பார்க்க)

# மாகாணசபை கலைப்பு நகல் சட்டம்

# எம்.பிக்கள் பரிசீலனைக்கு வழங்கப்பட்டது

## உயர் நீதிமன்றத்தில் நகல் மசோதா பரிசீலனை

### புதனன்று முடிவு தெரியலாம்

(கொழும்பு)

மாகாண சபையைக் கலைக்கும் நகல் மசோதா சட்டமா அதிபரினாலும், சட்ட வரைஞர்களினாலும் தயாரிக்கப்பட்டு நேற்றிரவு சகல பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இந்த மசோதா பற்றிய இறுதி முடிவை உயர்நீதிமன்றம் எதிர்வரும் புதன் கிழமை முடிவுசெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மாகாண சபைச் சட்டத்தில் திருத்தம்செய்வதற்கான நகல் சட்டம், அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணாக அமைந்துள்ளதா? இல்லையா? என்பதைத்தெரிந்துகொள்ள நகல் திருத்தச் சட்டத்தை ஜனாதிபதி பிரேமதாஸா உயர் நீதிமன்றத் தீர்ப்புக்குச் சமர்ப்பித்துள்ளார்.

ஒரு மாகாண சபை உறுப்பினர் தான் மேற்கொண்ட சத்தியப் பிரமாணத்துக்கு முரணாக அல்லது மாறாகநடந்துகொள்ளும் பட்சத்தில், அவரை மாகாண சபை நடைமுறைகளில் கலந்துகொள்ளாமலும், வாக்களிப்பில் கலந்துகொள்ளாமலும் தடுக்க ஆளுநருக்கு அதிகாரம் வழங்குவதற்கு இத்திருத்த மசோதா வகை செய்கின்றது.

அத்துடன் மாகாண சபை (6ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு வாரத்தில் கலைக்கலாம்

1987 ஆம் ஆண்டு 42 ஆம் இலக்க மாகாண சபைச் சட்டத்தில் கொண்டுவரப்படும் திருத்தச் சட்டம் அமுலாகும் திகதிக்கு முன்னதாக மாகாண சபை கலைத்திருந்தால், மேற்படி சட்டம் அமுலாகும் திகதியிலிருந்து ஒரு வாரத்துக்குப் பிறகு குறித்த மாகாண சபை கலைத்தாகப் பிரகடனப்படுத்த தேர்தல் ஆணையாளருக்கு இத்திருத்ச் சட்டம் அதிகாரம் வழங்குகிறது.

## 2000 ஆண்டில் மின்சாரம்

(யாழ்ப்பாணம்)

ஆசிய அபிவிருத்தி வங்கி, உலகவங்கி ஆகியவற்றின் உதவியுடன் நாட்டின் கிராமப்புறங்களுக்கு மின்சாரம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றன என்று மின்சக்தி எரி (6ஆம் பக்கம் பார்க்க)

## நகல் மசோதாவுக்கு எதிராக இரு மனுக்கள்

### முஸ்.காங்கிரஸ்ஈ.பி.ஆர்.எல்.எவ்.தாக்கல்செய்யும்

(கொழும்பு)

மாகாண சபையைக் கலைக்கும் நகல் மசோதாவை எதிர்த்து ஈ. பி. ஆர். எல், எப். இயக்கத்தினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளனர்.

இவ் நகல் மசோதா இலங்கை அரசியல் அமைப்பிற்கு முரணானதென்றும், இந்த மசோதா செல்லுபடியாகாது எனவும் தீர்ப்பளிக்கும்படி கோரும் மனுவை ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம் நாலளை உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளது. இவ் மனுவில் ஈ, பி. ஆர். எல். எப். உறுப்பினர்கள் ஆறாவது திருத்தச் சட்டத்திற்கு உட்பட்டு சத்தியப் பிரமாணம் செய்துள்ளமையால் அவர்களின் அங்கத்துவத்தை பறிக்க ஆளுநருக்கு உரிமையில்லை என இவ் மனுவில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக அறியவருகின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாளை மனுவைத் தாக்கல் செய்யவுள்ளது, இம் மனுவில் தங்களுக்கும் வடக்கு கிழக்கு மாகாணசபை பிர (6ஆம் பக்கம் பார்க்க)

## பொலிசார்கடமைநேரத்தில் அலுவலகத்தில் இல்லை

(யாழ்ப்பாணம்)

போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள பொலிஸ் பிரிவில் பொலிசார் கடமை நேரத்தில் தமது இருப்பிடங்களில் அமர்ந்திருப்பதுஇல்லை இதனால் முறைப்பாடுகள் செய்ய வரும் பொதுமக்கள் பொலிசார் உலாவச் சென்றுவிட்டு அவ்விடத்துக்கு வரும் வரை பொறுத்திருக்கவேண்டி உள்ளது.

அண்மையில் கிழக்கு மாகாணத்திலிருந்து மாற்றலாகி வந்த புதிய இளம் பொலிஸ்காரர் இங்கு கடமையில் இருந்து வருகின்றனர். இவர்களுக்கு முறையீடுகளைப் பதிவு செய்யும் பயிற்சி ஒழுங்காக பயிற்றிவிக்கப்படாததால் இவர்கள் அனுபவம் (6ஆம் பக்கம் பார்க்க)

## சர்வகட்சி மாநாட்டிற்கு ஈழவர் ஜனநாயக முன்னணி போகாது!

(யாழ்ப்பாணம்)

சர்வகட்சி மாநாட்டுக் குழுக்கூட்டம் இன்று கொழும்பில் கூடும் பொழுது ஈழவர் ஜனநாயக முன்னணியின் பிரதிநிதிகள் கலந்து

## மக்கள் வங்கிப் பாதுகாவலர் கெடுபிடி அதிகரிப்பு

(வவுனியா)

வவுனியா மக்கள் வங்கிக் கிளையில் சேவையில் ஈடுபட்டு வரும்பாதுகாவலர்களின் கெடுபிடிகள் அதிகரித்திருப்பதாக மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட வங்கிக் கிளையின் சேவை நேரத்தில் வங்கி

லர் வெளியில் சென்றிருக்கும் சமயங்களில் மக்கள் பல நிமிடங்கள் கதவு திறப்பதற்காக காத்திருக்கவேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சேவை நேரத்தில்கூட வங்கி வளவினுள் செல்வதற்கான அனுமதி பெறுவதில் சிரமம்

மாகாண சபையைக் கலைக்கும் நகல் மசோதா சட்டமா அதிபரினாலும், சட்ட வரைஞர்களினாலும் தயாரிக்கப்பட்டு நேற்றிரவு சகல பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இந்த மசோதா பற்றிய இறுதி முடிவை உயர்நீதி மன்றம் எதிர்வரும் புதன் கிழமை முடிவுசெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மாகாண சபைச் சட்டத்தில் திருத்தம்செய்வதற்கான நகல் சட்டம், அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணாக அமைந்துள்ளதா? இல்லையா? என்பதைத்தெரிந்துகொள்ள நகல் திருத்தச் சட்டத்தை ஜனாதிபதி பிரேமதாஸா உயர் நீதி மன்றத் தீர்ப்புக்குச் சமர்ப்பித்துள்ளார்.

ஒரு மாகாண சபை உறுப்பினர் தான் மேற்கொண்ட சத்தியப் பிரமாணத்துக்கு முரனாக அல்லது மாறாகநடந்து கொள்ளும் பட்சத்தில், அவரை மாகாண சபை நடைமுறைகளில் கலந்துகொள்ளாமலும், வாக்களிப்பில் கலந்து கொள்ளாமலும் தடுக்க ஆளுநருக்கு அதிகாரம் வழங்குவதற்கு இத்திருத்த மசோதா வகை செய்கின்றது.

அத்துடன் மாகாண சபை

(6ஆம் பக்கம் பார்க்க)

... பிரகடனப்படுத்த தேர்தல் ஆணையாளருக்கு இத்திருத்ச் சட்டம் அதிகாரம் வழங்குகிறது.

மாகாண சபையைக் கலைக்கும் நகல் மசோதாவை எதிர்த்து ஈ. பி. ஆர். எல், எப். இயக்கத்தினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளனர்.

இவ் நகல் மசோதா இலங்கை அரசியல் அமைப்பிற்கு முரணானதென்றும், இந்த மசோதா செல்லுபடியாகாது எனவும் தீர்ப்பளிக்கும்படி கோரும் மனுவை ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம் நாளை உயர் நீதி மன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளது. இவ் மனுவில் ஈ, பி. ஆர். எல். எப். உறுப்பினர்கள் ஆறாவது திருத்தச் சட்டத்திற்கு உட்பட்டு சத்தியப் பிரமாணம் செய்துள்ளமையால் அவர்களின் அங்கத்துவத்தை பறிக்க ஆளுநருக்கு உரிமையில்லை என இவ் மனுவில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக அறியவருகின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாளை மனுவைத் தாக்கல் செய்யவுள்ளது, இம் மனுவில் தங்களுக்கும் வடக்கு கிழக்கு மாகாணசபை பிர

(6ஆம் பக்கம் பார்க்க)

# பொலிசார்கடமைநேரத்தில் அலுவலகத்தில் இல்லை

(யாழ்ப்பாணம்)

போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள பொலிஸ் பிரிவில் பொலிசார் கடமை நேரத்தில் தமது இருப்பிடங்களில் அமர்ந்திருப்பதுஇல்லை இதனால் முறைப்பாடுகள் செய்ய வரும் பொதுமக்கள் பொலிசார் உலாவச் சென்றுவிட்டு அவ்விடத்துக்கு வரும் வரை பொறுத்திருக்கவேண்டி உள்ளது.

அண்மையில் கிழக்கு மாகாணத்திலிருந்து மாற்றலாகி வந்த புதிய இளம் பொலிஸ்காரர் இங்கு கடமையில் இருந்து வருகின்றனர். இவர்களுக்கு முறையீடுகளைப் பதிவு செய்யும் பயிற்சி ஒழுங்காக பயிற்றிவிக்கப்படாததால் இவர்கள் அனுபவம்

(6ஆம் பக்கம் பார்க்க)

# 2000 ஆண்டில் மின்சாரம்

(யாழ்ப்பாணம்)

ஆசிய அபிவிருத்தி வங்கி, உலகவங்கி ஆகியவற்றின் உதவியுடன் நாட்டின் கிராமப்புறங்களுக்கு மின்சாரம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றன என்று மின்சக்தி எரி

(6ஆம் பக்கம் பார்க்க)

# சர்வகட்சி மாநாட்டிற்கு ஈழவர் ஜனநாயக முன்னணி போகாது!

(யாழ்ப்பாணம்)

சர்வகட்சி மாநாட்டுக் குழுக்கூட்டம் இன்று கொழும்பில் கூடும் பொழுது ஈழவர் ஜனநாயக முன்னணியின் பிரதிநிதிகள் கலந்து கொள்ள மாட்டார்களென்று அந்த முன்னணியின் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ளும் இலங்கை முஸ்லிம் காங்கிரசும்; ஈ. பி. ஆர். எல். எவ். குழுவினரும் மாகாண சபையைக் கலைக்கும் நகல் மசோதாவை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யவிருப்பதும் தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுக்கும், தமிழ் பேசும் மக்களின் தன்மானத்துக்கும் கௌரவத்துக்கும் சவாலாக விளங்கும் அரசியல் அமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கு எதிர்க்கும் கட்சிகள் சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொள்ளுவதால் அதைப் பகிஷ்கரிக்கப்போவதாகவும் அந்தப் பிரமுகர் சொன்னார் (6ஆம் பக்கம் பார்க்க)

# மக்கள் வங்கிப் பாதுகாவலர் கெடுபிடி அதிகரிப்பு

(வவுனியா)

வவுனியா மக்கள் வங்கிக் கிளையில் சேவையில் ஈடுபட்டு வரும்பாதுகாவலர்களின் கெடுபிடிகள் அதிகரித்திருப்பதாக மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட வங்கிக் கிளையின் சேவை நேரத்தில் வங்கியின் கதவு பூட்டிவைக்கப்பட்டிருக்கும், பாதுகாவலர் வெளியில் சென்றிருக்கும் சமயங்களில் மக்கள் பல நிமிடங்கள் கதவு திறப்பதற்காக காத்திருக்கவேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சேவை நேரத்தில்கூட வங்கி வளவினுள் செல்வதற்கான அனுமதி பெறுவதில் சிரமம் ஏற்பட்டிருப்பதாகவும், வவு

(6ஆம் பக்கம் பார்க்க)

# 15ஆம் திகதி வவுனியாவில் 59பேருக்கு பொலிஸ் பயிற்சி

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் பொலிஸ் படைக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பயிற்சிகள் எதிர்வரும் பதினைந்தாம் திகதி வவுனியா பொலிஸ் நிலையத்தில் ஆரம்பிக்கப்பட உள்ளன.

இம்மாவட்டத்தில் 59 பேர் பொலிஸ் படைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் குறிப்பிட்ட திகதியன்று தமக்குரிய ஆவணங்களுடன் வரவேண்டுமென்று வவுனியா பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மையில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் பொலிஸ் படைக்கென நேர்முகப்பரீட்சை வைத்து 457 பேர் தெரிவுசெய்யப்பட்டது தெரிந்ததே.

இவர்களுக்கான பயிற்சி நெறி, வவுனியா உட்பட யாழ்ப்பாணம் திருக்கோண

(6ஆம் பக்கம் பார்க்க)

# புகையிரத நிலையத்தில் ரிக்கற் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் துறையிலிருந்து கொழும்புக்கு ரயில் டிக்கெட் தீர்ந்து போன நிலையில் இருப்பதனால் அண்மைக் காலமாக காங்கேசன் துறையிலிருந்து ரிக்கெற் பெற்று

(6ஆம் பக்கம் பார்க்க)

# நெல்உற்பத்தியில் 17 வீதம் மகாவலியில்

(கொழும்பு)

இலங்கையின் மொத்த விளைச்சலில் 17சதவீதம் துரித மகாவலி அபிவிருத்திப் பகுதியில் இருந்து பெறப்படுகிறது என்று காணி நீர்ப்பாசன மகாவலி அபிவிருத்தி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மகாவலி குடியிருப்புப் பிரதேசத்தில் 50,000 குடிகள் அமர்த்தப்பட்டுள்ளனர் என்றும் திட்டமிட்டபடி ஐந்து நீர்த்தேக்கங்களும் அமைக்கப்பட்டு 600 மெகவாட் மின் உற்பத்தி பெறப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார்

# பாண் நிறை குறைவு வியாபாரிக்கு 4000 அபராதம்

(கொழும்பு)

நிறைகுறைந்த பாணை விற்ற இரத்மலானையைச் சேர்ந்த பேக்கரி உரிமையாளர் ஒருவருக்கு மாளிகாகந்த மாஜிஸ்ரேட் நீதிமன்றம் 4000 ரூபா அபராதமும்

(6ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் உதவியுடன் வீதிகள் புனரமைப்பு

(வவுனியா)

விடுதலைப் புலிகளின் ஆதரவுடனும், உதவியுடனும் வன்னிப்பகுதிகளில் பல வீதிகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன. மேலும் பல வீதிகள் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றன.

அண்மையில் பூவரசன் குளத்திலிருந்து செட்டிகுளம் நோக்கிச் செல்லும் வீதி திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

இரணை இலுப்பைக்குளம் பனங்காமம் வீதி சீரமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. புதூர் நாகதம்பிரான் கோவிலுக்குச் செல்லும் வீதி திருத்தி அமைக்கப்பட உள்ளது.

இவ்வாறு மேலும் பல வீதிகள் புனரமைக்கப்பட உள்ளன. சில வீதிகள் புதிதாக அமைக்கப்பட உள்ளன.

பள்ளமாகவும், மேடாகவும் மக்கள் நடந்து செல்லமுடி

(6ஆம் பக்கம் பார்க்க)

# ஸ்ரீ. ல. சு. கட்சி தூதுக்குழு யாழ்ப்பாணம் வருகிறது

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்றத் தூதுக்குழு ஒன்று மிக விரைவில் யாழ்ப்பாணத்திற்கு வரவுள்ளது.

இத் தூதுக்குழுவினர் யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினருடன் பேச்சுவார்த்தைகளை

(6ஆம் பக்கம் பார்க்க)

# அமைச்சர் ஹமீத் நாளை வருகிறார்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காகநீதிஅமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத் நாளை யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

இச்சந்திப்பின் போது வடக்கு கிழக்கு பாதுகாப்பு

(6ஆம் பக்கம் பார்க்க)

# தமிழரின் போராட்டத்தில் விடுதலைப் புலிகள் பங்கு

## மாணவர்களுக்கு வரலாற்றை ஆசிரியர்கள் கூறவேண்டும்

- பாலா

(யாழ்ப்பாணம்)

தமிழரின் தேசியவிடுதலைப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதற்கு ஒரு வரலாறு உண்டு. இந்த வரலாறு எப்படி ஆரம்பமானது, எந்த திசையில் சென்றது. விடுதலைப்புலிகளின் பங்கு என்ன போன்ற அந்த வரலாற்றை மாணவர்கள் அறியச் செய்யவேண்டியது ஆசிரியர்களின் கடமையாகும்.

இவ்வாறு நேற்று யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெற்ற அதிபர்களுக்கான கருத்தரங்கில் உரையாற்றிய விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார். இக் கூட்டத்திற்கு யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு. சுந்தரலிங்கம் தலைமை தாங்கினார்.

தொடர்ந்து பேசிய அன்ரன் பாலசிங்கம் இலங்கை சுதந்திரம் பெற்றது முதல் இன்று வரை தமிழர்களுக்கு நிகழ்ந்த சம்பவங்கள், ஒரு வரலாற்று நிகழ்ச்சி. பெரிய தேசிய இனம் சிறிய தேசிய இனத்தை அடக்கி ஒடுக்கிவருவது சிறிய தேசிய இனத்தின் கல்வி, தொழித்துறை போன்ற முக்கியமான அத்திவாரத்தை ஒழித்து ஒடுக்கிடும் நடவடிக்கை கட்டவிழ்த்து விடப்

(6ஆம் பக்கம் பார்க்க)

# லண்டனில் குண்டு வெடிப்பு 17 பேர் காயம்

(லண்டன்)

லண்டனில் இராணுவ கட்டிடத்திற்குள் குண்டு ஒன்று வெடித்தபோது 17 பேர் காயமடைந்துள்ளனர்.

இக்குண்டு வெடிப்பில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். பிறந்தநாள் கொண்டாட்டத்தில் கலந்துகொண்ட இளைஞர்களே இதில் காயமடைந்தவர்களாவர்.

அயர்லாந்து விடுதலை இயக்கத்தைச்சார்ந்தஇராணுவத்தினரே இக்குண்டை

(6ஆம் பக்கம் பார்க்க)

# திறமையற்ற ஆசிரியர்களால் மாணவரைநல்வழிப்படுத்தமுடியாது

- டொமினிக்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் நியமனத்தில் முழுக்க முழுக்க திறமைக்கே முதலிடம்வழங்க வேண்டும் திறமைக்கு ஏற்ற நியமனம் இல்லாத ஆசிரியர்களால் மாணவரை நல்வழிப்படுத்த முடியாது'' என நேற்று அதிபர்களுக்கான கருத்தரங்கில் உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் டொமினிக் தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில் மாணவ சமுதாயத்தை நற்பிரஜைகளாக்குவது ஆசிரியர்களின் பணி 1977க்கு முன்னர் ரியூட்டரிகளை மாணவர்கள் நாடவில்லை. ரியூட்டரியில் ஒரு ஆசிரியர் மிகவும் கவனமாக தனது மாணவன் என்று கற்பி கிறார். நூறு மாணவருக்கு ஒரு ஆசிரியர் ஆனால் பாடசாலைகளில் அப்படியில்லை. பாடசாலையில் பாடம் சரியாக முடிக்கப்படாததாலேயே மாணவர்கள் ரியூட்டரிகளை நாடுகின்றனர். எனவே ஆசிரியர்கள் தமது பிள்ளை என எண்ணி தமது மாணவரை பயிற்றுவிக்க வேண்டும்.

சிறந்த சாரணன், சிறந்த மாணவன் என பரிசில்கள் வழங்கப்படுகின்றன. ஆனால் ஆசிரியர்களுக்கு அப்படி ஒன்றும் சிறந்த ஆசிரியர்கள் என்று வழங்கப்படுவதில்லை.

ஒரு பாடசாலைக்கு அண்மையில் சென்றபோது எத்தனை மாணவர் என்று அதிபரிடம் கேட்டோம். அதற்கு அவர் பதிவுஏட்டைப் புரட்டு

(6ஆம் பக்கம் பார்க்க)

# கேள்வி அறிவித்தல்கள்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை.**

**திருநெல்வேலி இடவளவில் உள்ள சிற்றுண்டிச்சாலை**

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் திருநெல்வேலி இடவளவில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலையை நடாத்துவதற்காக இலங்கை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரினால் 27. 06. 1990 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப் படும்.

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 500/– உம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 50/- உம் பல்கலைக்கழக நிதிக்கிளையில் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டுக்களைச் சமர்ப்பித்துக் கேள்விப் படிவங்களை இப் பல்கலைக் கழகத்தின் நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேலதிக விபரங்களைக் காரியாலய நேரங்களில் என்னிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

--பதிவாளர்
(B-1141)

**மருத்துவபீட சிற்றுண்டிச்சாலை**

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மருத்துவபீட சிற்றுண்டிச்சாலையை நடாத்துவதற்காக இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரினால் 27. 06. 1990 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப் படும்.

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 500/-உம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 50/-உம்



**வரிவிளம்பரம்**

**விற்பனைக்கு**

புதிய அச்சடிக்கும் திருமணக் கார்ட்டுகள் சகல டிசைன்களிலும் விற்பனையாகிறது. உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்ய ஸ்ரீ காந்த் புத்தகசாலை, மின்சார நிலைய வீதி, பஸ் நிலைய முன் புறம், யாழ்ப்பாணம். (B. 1002)

**புறொயிலர் குஞ்சுகள்**
**CHRISTOMBU FARM, THREE ACRE FARM, BAIRAHA FARM** புறோயிலர் குஞ்சுகளை முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். **Bairahn Farm** புறோயிலர் குஞ்சுகள் மட்டும் **July 15**வரை மட்டுப் படுத்தப்பட்ட விநியோகம். **July 15**க்கு பின் தேவையான அளவு **Bairaha Farm** புறோயிலர் குஞ்சுகளைப் பெற்றுக் கொள்ளலாம். சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (R 349)

**காணவில்லை**

பெயர்:- ப, பத்மினி இடம் மாறாஇலுப்பை நெடுங்கேணி யாழ்ப்பாணம் தெல்லிப்பளை ஆஸ்பத்திரியிலிருந்து வீடு நோக்கி யாழ்ப்பாணம் வரும்போதுகாணாமல் போய் விட்டார். 30வயது அரைக் கவுண் சட்டை அணிந்திருக்கின்றார். தகவல் தருவோருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
முகவரி :- ப. கோபாலன் மாறாஇலுப்பை, நெடுங்கேணி
(R-349)


காஷ்மீர் பிரச்சினை தீர்வுக்கு

# இந்தியாவும் பாகிஸ்தானும் பேச்சு நடாத்த யோசனை

(இஸ்லாமாபாத்)

காஷ்மீர் பிரச்சினை காரணமாக இந்திய பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் நிலவும் பதற்றத்தைத் தணிக்க இந்தியா எடுக்கும் முயற்சிகளையும் யோசனைகளையும் பாகிஸ்தான் ஆதரிப்பதாக பதில் தெரிவித்துள்ளது.

எனினும் இந்தியா எல்லையில்தனதுபடைகளை குவித்து வைத்திருப்பதாகவே பாகிஸ்தான் தெரிவிக்கிறது.

இதேவேளை பாகிஸ்தான் அனுப்பியுள்ள பதிலை இந்தியா ஆராய்ந்துவருகிறது எனவும் அவை திருப்திகரமாக இல்லைஎனவும் இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இருநாட்டு வெளியுறவு செயலாளர்களும் இது தொடர்பாக சந்தித்துப்பேசவேண்டும் என்று பாகிஸ்தான் விரும்பி உள்ளதாகவும் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தீவிரவாதிகளுக்கு பயிற்சி அளிப்பது, ஆயுதங்கள் கடத்தல் தொடர்பான இந்தியாவின் யோசனைகளுக்கு பாகிஸ்தான் திருப்திகரமாக பதில் தரவில்லையென இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் கூறினார்.

# வேலணை ஆஸ்பத்திரியில் நலன்புரிச் சங்க கூட்டம்

(தீவுப்பகுதி)

நோயாளர்களின் நலன் கருதியும் ஆஸ்பத்திரியின் முன்னேற்றத்திற்காகவும் அபிவிருத்திச்சபை பாடுபட வேண்டும் நோயாளர்களும், ஏழைகளும் இறைவனின் திருவுருவங்கள் என்று சொல்லப்படுகின்றது. அத்தகைய ஓர் இடத்தை ஆஸ்பத்திரிகள் பெற்றுள்ளன. இந்த ஆஸ்பத்திரியில் பல குறைபாடுகளும் வசதியீனங்களும் உள்ளன. இவ்வாஸ்பத்திரி மாவட்ட வைத்திய சாலையாக வெகு விரைவில் திகழ வேண்டும்.

மேற்கண்டவாறு வேலணை அரசினர் ஆஸ்பத்திரியின் அபிவிருத்திச் சபைக் கூட்டத்திற்கு தலைமைவகித்து உரையாற்றிய ஆஸ்பத்திரியின் வைத்திய அதிகாரி டாக்டர் ஆ. திருநாவுக்கரசு குறிப்பிட்டார்.

திருமதி தி. பத்மாவதி இங்கு பேசுகையில் நிர்வாகத்தை ஏற்பவர்கள் தமது பங்களிப்பைச் செய்ய வேண்டும். தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் அரசாங்கத்தை நம்பியிராது நமது சுயமுயற்சி மூலம் முன்னேற வேண்டும். பெண்களுக்கு இந்த அபிவிருத்திச் சபையில் கூடுதலான அக்கறை உண்டு என்றார்.

திரு. வா. தவச்செல்வம் ஜே. பி. உரையாற்றுகையில் அபிவிருத்திச் சபையில் பதவி ஏற்பவர்கள் ஓரளவாவது தமது நேரத்தை ஒதுக்கி செயல்படவேண்டும். நீங்கள் செய்யும் சேவைகள் தான் இக்கிராமத்திற்கு முன்னோடியாக அமையும் என்றார் வேறுபலரும் உரையாற்றனார்கள்.

பின்வருவோர் புதிய நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. வா. தவச்செல்வம் ஜே. பி. உபதலைவர் திருமதி தி. பத்மாவதி (ஆசிரியை) செயலாளர் டாக்டர் க. ஜெயச்சந்திரமூர்த்தி உபசெயலாளர் திரு. கு. சண்முகலிங்கம் பொருளாளர் ரு. அருந்தவநாயகம் பன்னிரண்டு பேர் கொண்ட நிர்வாகசபையொன்றும் அமைக்கப்பட்டது. (15)

# பெண்கள் பாடசாலைக்கு தொலைபேசி இல்லை

(நிந்தவூர்)

நிந்தவூர் அல்-மஸ்ஹர் பெண்கள் உயர்தரப்பாடசாலைக்கு இதுவரை தொலைபேசிவசதி ஏற்படுத்தப் படாமை குறித்து பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

நிந்தவூர் பகுதியிலுள்ள பெண்களுக்கென இயங்கும் இந்த உயர்தரப்பாடசாலையில் தொலைபேசி வசதி இல்லாததால் நிருவாக ரீதியான வெளித்தொடர்புகள் கொள்வதில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

எனவே இந்தப் பாடசாலைக்கு தொலைபேசி வசதியை ஏற்படுத்துவதில் சம்பந்தப்பட்டவர்கள் உடன் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனப் பெற்றோர் கோருகின்றனர்.

இது குறித்து வடக்கு, கிழக்கு மாகாண கல்விஅமைச்சின் திட்டமிடல்பணிப்பாளர் திரு. சீ. நடராசாவின் கவனத்திற்கு பாடசாலை அதிபர் ஜனாப் பா. எம். செயினுலா

# சைக்கிள் ஓட்டப் போட்டி

(யாழ். விளையாட்டு நிருபர்)

# பயிற்சி நெறி

(சுதுமலை)

சூழலில் பாதுகாப்பு பற்றிய பயிற்சி நெறியை மேற்கொள்ள நல்லூர் பிரதேச சபை

# “மில்க்கோ” நிறுவனம் மீண்டும் செயல்படும்

(கிளிநொச்சி)

மில்க்கோ நிறுவனம் மீண்டும் பால் பதனிடும் வேலைகளை ஓர் இரு வாரங்களில் ஆரம்பிக்கவுள்ளது.

கிளிநொச்சியில்நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசிய கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ் அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த காலங்களில் இங்கு நடைபெற்ற வன்செயல்களினால் இங்குள்ள பால் பதனிடும் தொழிற்சாலை செயலிழந்தது அதனால் இங்கு வாழுகின்ற கால் நடை வளர்ப்போர் பாலை விற்க முடியாது கஷ்டப்பட்டனர் அந்த நிலை வெகு விரைவில் மாறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பால் பதனிடும் தொழிற்சாலையின் திருத்த வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகிறது ஓர் இரு வாரங்களில் திருத்த வேலைகள் முடிவடையும் அதன் பின் கால் நடை வளர்ப்போர் பாலை அங்கே வழங்க முடியும்.

மில்க்கோ நிறுவனம் பாலைப் பதனிட்டுப் பல பால்ப் பொருட்களை உற்பத்தி செய்யவுள்ளது இங்கிருந்து அவை யாழ். மாவட்டத்திற்கு ஏடுத்துச் செல்லப்பட்டு அங்கும் விற்பனை செய்யவுள்ளது. அதனால் யாழ். மாவட்டத்தில் நிலவி வரும் பால் பற்றாக்குறைகளையும் போக்க முடியும். (49)

# தனியார்பஸ்ஸின் அவலம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபடும் தனியார் மினிபஸ் ஒன்றில் ஏறும் அனைத்து பிரயாணிகளும் அந்த வாகன உரிமையாளரான சாரதியை வாய்க்கு வந்தபடி திட்டுவதை அனேக நாட்களாக அவதானிக்க முடிகிறது.

இதற்கு காரணம் அந்த வாகனத்தில் நடாத்துனர் இல்லை. வாகன உரிமையாளரே சாரதியாகவும் நடாத்துனராகவும் கடமையாற்றுவதால் பிரயாணிகளிடம் பணம் வாங்கும் வேளைகளில் வாகனத்தை நிறுத்தி வைத்து விட்டு பணம் வாங்குகிறார். இதனால் நேரம் வீணடிக்கப் படுவதனால் பிரயாணிகள் கோபமடைகின்றனர்.

அதுமட்டுமன்றி பிரயாணிகளை அளவுக் அதிகமாக ஏற்றி அடைத்து விட்டு கதவுகளை மூடி விடுவதனால் காற்றின்றி பிரயாணிகள் அவஸ்தைப்பட்டு மூச்சு விடக் கூட கஸ்டப்படுகின்றனர்.

மேலும் பிரயாணிகளிடம் மீதிக்காசுகொடுக்கும் வேளைகளில் ஐம்பது சதம் ஒரிரூபாய் பிடித்துக் கொள்ளப்படுவதா

# ஒப்பந்தக்காரர் சங்கம் நியமிப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் கிடைக்கப்படும் வேலைகளை குறுகிய காலத்திற்குள் செய்து முடிப்பதற்கும், சீராகச் செய்வதற்கும். தனியாருக்கும், கிராம முன்னேற்றச் சங்கங்களுக்கிடையிலான போட்டி மற்றும் மனஸ்தாபங்களை இல்லாமல் செய்வதற்கும் மேற்படி மாவட்டரீதியில் ஒப்பந்தக்காரர் சங்கம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வவுனியா மாவட்டப் பொறுப்பாளர் திரு. ஞானம் கலந்துகொண்ட மேற்படி சங்கம் அமைக்கக்கூட்டம் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை (5- 6–90) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், குறிப்பிட்ட சங்கத்திற்காக பதினொரு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். (தி)

# மாதாந்த பத்திரிகையாளர் சந்திப்பு

(நிந்தவூர்)

கல்முனை சாகிறாக்கல்லூரியில் மாதாந்தம் பத்திரிகையாளர்களுடனான சந்திப்பு நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

கல்லூரி அதிபர் ஜனாப். ஏ. எம். ஹூசைன் முன்மாதிரியாக இச்சந்திப்பை ஏற்பாடு செய்து நடத்தி வருகின்றார். இந்த சந்திப்பின் போது உள்ளூர் செய்தியாளர்கள் (நிருபர்கள்) கல்லூரிக்கு பிரதி மாதமும் ஒரு தினம் அழைக்கப்பட்டு கல்லூரியின் செயற்பாடுகள், சாதனைகள், தேவைகள், விழாக்கள் என்பவை பற்றிய தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன. (53)

# பொங்கலும் தீ மிதிப்பும்

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை முகவி


**வின்ஸர்(யாழ்)**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

இன்றுமுதல்
**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 4.45, 7.00, 9.3
சனி ஞாயிறு
10-30, 2-30, 4-45, 7-00, 9-30
STUART STEEN PEDRO HUGHES BENARD GEVRTS
**THE THUNDERING NINJA**
(கராட்டிப் படம்)
சினிமாஸ் கோப்

**லிடோ (யாழ்)**
தினசரி 4-30, 7-00, 9–30
சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில்
10–30, 2-30, 6-30, 9-30
**'ALIENS'**
Packed with Action, Thrill & Suspense
வருகிறது
மாவீரன்
(புதிய பிரதி)

**வெலிங்டன் (யாழ்)**
தினசரி 4.00, 7.00, 9.45
சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில்
10.30, 2.30, 6.30, 9.30
இன்று முதல்
ஜனாதிபதியின் தங்கப் பதக்கம் பரிசு பெற்ற
விசு, லக்ஷ்மி, ரகுவரன், இளவரசி நடித்த
A.V.M. இன்
**சம்சாரம் அது மின்சாரம்**
(கலர்)

**மனோகரா - (யாழ்)**
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு
10-30, 2–30. 6.30 & 9.30
சுப்பர் ஸ்ரார் ரஜனி கௌதமி, ரகுவரன், S. S. சந்திரன், பேபி ஷாலினி, சரளா
நடித்த
**ராஜா சின்ன ரோஜா**
கவுஸ்புல் காட்சியாக வெற்றிநடை போடுகிறது

06. 06. 90

--பதிவாளர்
(B-1141)

மருத்துவபீட
சிற்றுண்டிச்சாலை

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மருத்துவபீட சிற்றுண்டிச்சாலையை நடாத்துவதற்காக இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரினால் 27. 06. 1990 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 500/-உம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 50/-உம் பல்கலைக்கழக நிதிக் கிளையில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டுக்களைச் சமர்ப்பித்துக் கேள்விப் படிவங்களை இப் பல்கலைக் கழகத்தின் நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேலதிக விபரங்களைக் காரியாலய நேரங்களில் என்னிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

--பதிவாளர்
(B-1142)

பாலசிங்கம் விடுதி
சிற்றுண்டிச்சாலை

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பாலசிங்கம் விடுதிச் சிற்றுண்டிச்சாலையை நடாத்துவதற்காக இலங்கை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரினால் 27. 06. 1990 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா500/-உம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 50/–உம் பல்கலைக்கழக நிதிக் கிளையில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டுக்களைச் சமர்ப்பித்துக் கேள்விப்படிவங்களை இப் பல்கலைக்கழகத்தின் நலச் சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேலதிக விபரங்களைக் காரியாலய நேரங்களில் என்னிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

– பதிவாளர்
(B-1143)

# பெண்கள் பாடசாலைக்கு தொலைபேசி இல்லை

(நிந்தவூர்)

நிந்தவூர் அல்-மஸ்ஹர் பெண்கள் உயர்தரப்பாடசாலைக்கு இதுவரை தொலைபேசிவசதி ஏற்படுத்தப்படாமை குறித்து பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

நிந்தவூர் பகுதியிலுள்ள பெண்களுக்கென இயங்கும் இந்த உயர்தரப்பாடசாலையில் தொலைபேசி வசதி இல்லாததால் நிருவாக ரீதியான வெளித்தொடர்புகள் கொள்வதில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

எனவே இந்தப் பாடசாலைக்கு தொலைபேசி வசதியை ஏற்படுத்துவதில் சம்பந்தப்பட்டவர்கள் உடன் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனப் பெற்றோர் கோருகின்றனர்.

இது குறித்து வடக்கு, கிழக்கு மாகாண கல்விஅமைச்சின் திட்டமிடல்பணிப்பாளர் திரு. சீ. நடராசாவின் கவனத்திற்கு பாடசாலை அதிபர் ஜனாப் பா. எம். செயினுலாப்தீன் கொண்டுவந்துள்ளார்.

விரைவில் இந்தக் குறைபாட்டை நீக்கத்தாம் நடவடிக்கை மேற்கொள்வதாக திரு. நடராசா உறுதி அளித்துள்ளார் எனவும் அறியவருகிறது.

(52)

## சைக்கிள் ஓட்டப் போட்டி

(யாழ். விளையாட்டு நிருபர்)

விளையாட்டு அமைச்சின் ஆதரவுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் ஆண்கள், பெண்கள் முதலானோர் பங்கு கொண்ட நீண்ட தூரச் சைக்கிள் ஓட்டப்போட்டி மற்றும் மரதனோட்டம்ஆகியன இடம் பெற்றன.

மாவட்ட ரீதியில் இடம் பெற்ற இப் போட்டிகளைக் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். அமிர்தலிங்கம் ஆரம்பித்து வைத்தார்.

போட்டிகளுக்கானஏற்பாடுகளை மாவட்ட விளையாட்டதிகாரி திரு. கனகராஜா செய்திருந்தார். (42)

## கைதடி சித்தவைத்திய பகுதிச் சிற்றுண்டிச்சாலை

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கைதடி சித்த வைத்தியப் பகுதியிற் சிற்றுண்டிச்சாலையை நடத்துவதற்காக இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரினால் 27. 06. 1990 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணி வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 500/-உம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 50/- உம் பல்கலைக்கழக நிதிக் கிளையில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டினைச் சமர்ப்பித்துக் கேள்விப் படிவங்களை இப் பல்கலைக்கழக நலச் சேவைக் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள்நிராகரிக்கப்படும். மேலதிக விபரங்களைக் காரியாலய நேரங்களில் என்னிடமிருந்துபெற்றுக்கொள்ளலாம்

- பதிவாளர்
(B.1144)

யும் சேவைகள் தான் இக்கிராமத்திற்கு முன்னோடியாக அமையும் என்றார் வேறுபலரும் உரையாற்றனார்கள்.

பின்வருவோர் புதிய நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. வா. தவச்செல்வம் ஜே. பி. உபதலைவர் திருமதி தி. பத்மாவதி (ஆசிரியை) செயலாளர் டாக்டர் க. ஜெயச்சந்திரமூர்த்தி உபசெயலாளர் திரு. கு. சண்முகலிங்கம் பொருளாளர் ரு. அருந்தவநாயகம் பன்னிரண்டு பேர் கொண்ட நிர்வாகசபையொன்றும் அமைக்கப்பட்டது. (15)

## பயிற்சி நெறி

(சுதுமலை)

சூழலில் பாதுகாப்பு பற்றிய பயிற்சி நெறியை மேற்கொள்ள நல்லூர் பிரதேச சபையில் இருந்து இருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். உள்ளூராட்சி திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள பயிற்சிநெறி 15.06.90ல் கொழும்பில் ஆரம்பமாகி நடைபெறவிருக்கிறது. (19)

இதற்கு காரணம் அந்த வாகனத்தில் நடாத்துனர் இல்லை. வாகன உரிமையாளரே சாரதியாகவும் நடாத்துனராகவும் கடமையாற்றுவதால் பிரயாணிகளிடம் பணம் வாங்கும் வேளைகளில் வாகனத்தை நிறுத்தி வைத்து விட்டு பணம் வாங்குகிறார். இதனால் நேரம் வீணடிக்கப்படுவதனால் பிரயாணிகள் கோபமடைகின்றனர்.

அதுமட்டுமன்றி பிரயாணிகளை அளவுக் அதிகமாக ஏற்றி அடைத்து விட்டு கதவுகளை மூடி விடுவதனால் காற்றின்றி பிரயாணிகள் அவஸ்தைப்பட்டு மூச்சு விடக்கூட கஸ்டப்படுகின்றனர்.

மேலும் பிரயாணிகளிடம் மீதிக்காசுகொடுக்கும் வேளைகளில் ஐம்பது சதம் ஒரிரூபாய் பிடித்துக் கொள்ளப்படுவதாகவும் சில வேளைகளில் கூடுதலான கட்டணம் அறவிடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய காரணங்களினால் சில வேளைகளில் பிரயாணிகள் ஆத்திரமடைந்து தாம் சென்றடைய வேண்டிய இடம் வரும்முன்பே பாதி வழியில் இறங்கி வேறு வாகனங்களில் சென்று விடுவதையும் காண முடிகிறது.

கல்முனை சாகிறா கல்லூரியில் மாதாந்தம் பத்திரிகையாளர்களுடனான சந்திப்பு நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

கல்லூரி அதிபர் ஜனாப். ஏ. எம். ஹுசைன் முன்மாதிரியாக இச்சந்திப்பை ஏற்பாடு செய்து நடத்தி வருகின்றார். இந்த சந்திப்பின் போது உள்ளூர் செய்தியாளர்கள் (நிருபர்கள்) கல்லூரிக்கு பிரதி மாதமும் ஒரு தினம் அழைக்கப்பட்டு கல்லூரியின் செயற்பாடுகள், சாதனைகள், தேவைகள், விழாக்கள் என்பவை பற்றிய தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன. (53)

## பொங்கலும் தீ மிதிப்பும்

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை முதலிவளவு அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த பொங்கற் பண்டிகை இன்று திங்கட்கிழமை பகல் ஆரம்பமாகும்.

மாலை அம்பாள் வீதி உலா வருவார். செவ்வாய்க்கிழமை அதிகாலை 6 மணி அளவில் பொங்கல் பண்டிகையும், தீ மிதிப்பு வைபவமும் நடைபெறும்

# சீனா உதவியுடன் பாகிஸ்தான் டாங்கி உற்பத்தி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானும், சீனாவும் 'டாங்கி'கள் செய்வதற்கான உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

ரி- 69 ரி- 85 ரக டாங்கிகளை பாகிஸ்தான் தயாரிப்பதற்கு உதவி செய்யும் பொருட்டு தொழில் நுட்ப பரிமாற்றம் செய்வதற்காக இவ் உடன்படிக்கையில் இரு நாடுகளும் கைச்சாத்திட்டுள்ளன.

கூட்டாக வடிவமைப்பது 21 ஆம் நூற்றாண்டுக்கு ஏற்ப பாகிஸ்தானின் டாங்கிகளை அமைப்பது போன்றன இவ் உடன் படிக்கை மூலம் நிறைவேற்றப்படும்.

# கள்ளச்சாராய விற்பனை தொடர்ந்து நடைபெறுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரின் முக்கிய சில பகுதிகளில் கள்ளத்தனமாக சாராயம் விற்கும்நடவடிக்கை தொடர்ந்து நடைபெற்று வருவது மக்களின் தகவல்களை அடுத்து தமக்குத் தெரியவந்துள்ளதாக யாழ். நகரப்பகுதி சுகாதாரத்துடன் சம்பந்தப்பட்டஉத்தியோகஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவர் மேலும் இவ்விடயம் பற்றி தெரிவிக்கும் பொழுது அங்கீகாரம் பெறாத இந்த சாராய பார்கள் தீயசக்திகள் எம்மக்களை வன்முறைகளால் கட்டுப்படுத்திக்கொண்டிருந்த போது இவை மதுபான பாவனையாளர் மத்தியில் பிரபல்யமாகி இருந்தது என்றும் தற்போது இத்தீயசக்திகள் விரட்டப் பட்டுவிட்ட போதிலும் அங்கீகாரமற்ற மதுபானகடைகளையும் திருட்டுச்சாராய விற்பனையையும் அகற்றமுடியாதிருப்பது அவதானிக்கக் கூடியதாக உள்ளது என்றார்.

விரைவில் இவற்றினை நேரடியாகச் சென்று உரிய நடவடிக்கை எடுக்க இருப்பதுடன் இவற்றின் திருட்டு வியாபாரத்தை மக்களுக்கு அம்பலப்படுத்த இருப்பதாகவும் அதே நேரம் ஒரு சில பொதுமக்கள் எம்முடன் தொடர்புகொண்டு தத்தமது பகுதிகளில்இருக்கும் இத்தகைய மதுபான கடைகளைத் தமக்கு இனம்காட்டி உள்ளனர். தற்போதுஇவ்விற்பனை நிலையங்கள் பற்றியும் அவற்றின் உரிமையாளர்களின் பெயர் விபரங்களும் தம்மால் சேகரிக்கப்பட்டு பட்டியல் தயாரிக்கப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)


எமது இன்றைய புதிய வெளியீடு!
சிவகுமார் ❋ ராதிகா ❋ ரகுமான்
"பகலில் பௌர்ணமி"
(ஒறிஜினல்)
எம்மிடம் ஓடியோ COMPACT DISC (CD) இசைத்தட்டுக்கள் விற்பனைக்கு உள்ளன. அனைத்தும் புதிய பாடல்கள்.
(B 1151)

KC குணம்
வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

அபிராமி திருமண சேவை
இன்று11. 6. 1990 திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகின்றது.
361, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(R-346)

மின்சாரம்
(கலர்)

மனோகரா - (யாழ்)
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு
10-30, 2–30.
6.30 & 9.30
சுப்பர் ஸ்ரார் ரஜனி
கௌதமி, ரகுவரன்,
S. S. சந்திரன், பேபி
ஷாலினி, சரளா
நடித்த
ராஜா சின்ன ரோஜா
கவுஸ்புல் காட்சியாக வெற்றிநடை போடுகிறது

06. 06. 90
ஹரன் - (யாழ்)
தினசரி 4·00, 6.30, 9.30
சனி, ஞாயிறு நாட்களில்
10.30, 2.30, 6.30, 9.30
M G R, ஜெயலலிதா,
அசோகன், சுந்தரராஜன்,
பண்டரிபாய், சோ
நடித்த
தேடிவந்த மாப்பிள்ளை
(புதிய பிரதி)

ராஜா (யாழ்)
தினசரி 4·00, 7·00, 9·45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில் 4 காட்சிகள்
மோகன், ரேவதி,
கார்த்திக்
நடித்த
மௌனராகம்
குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்.
அடுத்த புதிய வெளியீடு
கமல், கௌதமி நடித்த
அபூர்வ சகோதரர்கள்


## சஞ்சிகை வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

நேற்று ஞாயிற்றுக்கிழமை (10.6.90) முற்பகல் 9.00 மணிக்கு "நுண் தொழில் இளைஞன்" சஞ்சிகை வெளியீட்டு விழா யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் சி. இராஜேந்திரா தலைமையில் நடைபெற்ற இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக தொழில் நுட்பக் கல்வி பணிப்பாளர் டபிள்யூ சமரசிங்கா கலந்து கொண்டார்

மலர் வெளியீடும், கலை நிகழ்ச்சிகளும் நடந்தன.

# கச்சதீவை இந்தியாவுடன் இணைக்கஅ.தி.மு.க.கோரிக்கை

(தமிழ்நாடு)

தற்பொழுது இலங்கையின் ஆதிக்கத்தில் இருக்கும் கச்சதீவை இந்தியாவுடன் சேர்த்துக்கொள்ளவும் என்று அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (ஏ. டி. எம். கே.) கட்சி இந்திய மத்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது.

கச்சதீவு பல ஆண்டுகாலமாக இலங்கை, இந்தியா ஆகிய இரண்டு நாடுகளுக்கும் பொதுவான தீவாக இருந்து வந்தது. இத்தீவிற்கு இரு நாட்டினரும் விசா இன்றி தனியார் படகுகளிலோ, கப்பல்களிலோ வந்து போகக் கூடிய தீவாக இருந்தது. இதனால் இத்தீவு இரு நாட்டினருக்கும் பொதுவான ஒரு வியாபாரத் தளமாகவும் இருந்தது. ஆனால் சிறிமா, இந்திரா காந்தி ஒப்பந்தத்தின்படி இத்தீவு இலங்கைக்கு என கொடுக்கப்பட்டது.

ஆனால் தற்பொழுது இராமநாதபுரம் மீனவர்கள் பாதுகாப்புக் காரணமாக இத்தீவை இந்தியாவுடன் சேர்த்துக்கொள்ளுமாறு தமிழ்நாடு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இந்திய மத்திய அரசைக் கேட்டுள்ளது.

இக்கட்சியின் பொதுச் செயலாளர் திரு. எஸ். பி. சோமசுந்தரம் செய்தியாளரிடம் பேசும்போது, இவ்விடயம்பற்றி தமிழ்நாடு அரசு மத்திய அரசிடம் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகத் தெரிவித்தார். இலங்கையும் இந்தியாவும் நட்புறவு நாடுகள் என்பதனால் இந்த முயற்சியை எடுக்கவேண்டியது மிகவும் முக்கியம் என்றும் தெரிவித்தார்.

மேலும் தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை கடல்ப் பிராந்தியத்திலும், இலங்கை மீனவர்கள் இந்திய கடல் எல்லையிலும் மீன் பிடிப்பதற்கு அனுமதிக்க வழிகோலவேண்டும் என்றும் மத்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

## பொலிஸ் சுட்டதில் சிறுவன் பலி

(ஸ்ரீநகர்)

காஷ்மீர் பகுதியில் இந்திய ரிசேர்வ் பொலிஸ் படையினர் வீடு வீடாக தீவிரவாதிகளைத் தேடும் நடவடிக்கைகளை மேற்கொண்டபோது துப்பாக்கி பிரயோசம் செய்தனர்.

இதனால் இரண்டு வயது சிறுவன் ஒருவன் பலியானான் அவனது குடும்பத்தினர் காயமடைந்தனா. இதனையடுத்து இப்பகுதியில் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

# முதலாளிகளுக்கு ரஷ்யாவில் வரவேற்பு

(மாஸ்கோ)

ரஷ்யாவில் பொதுமக்கள் அபிப்பிராய நிலையம் எடுத்த அபிப்பிராய மதிப்பீட்டின் பிரகாரம் 4/3 பங்கினர் சிறு தனியார் கைத்தொழில் முயற்சிகளை வரவேற்றுள்ளனர்.

$\frac{1}{4}$ பகுதியினரேபெரிய தொழிற்சாலைகளை தனியார்துறைக்குவழங்கவிருப்பம் தெரிவித்தனர். இதற்குக் காரணம் பாரிய தொழிற்சாலைகளை தனியார் கட்டுப்படுத்த முடியாதென்பதாகும்.

சுமார் 30சத வீதமானோர் தனிப்பட்ட வர்த்தகநிலையங்களைத் திறப்பதற்கு விருப்பம் தெரிவித்தனர். தனியார் துறை விஸ்தரிப்புக்கு இன்று ரஷ்யாவில் பல திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

## சதிப் புரட்சிக்கு 12வருட சிறை

(மணிலா)

பிலிப்பைன்ஸில் சதிப்புரட்சியில் ஈடுபட எத்தனிப்பவர்களுக்கு பன்னிரண்டு வருட சிறைத் தண்டனை வழங்கும் சட்ட மூலம் செனற் சபையில் நிறைவேற்றப் பட்டது.

இங்கு அடிக்கடி இந்த சதிப் புரட்சிகள் இடம் பெற்று வருவதால் இந்த சட்ட மூலம் அவசரமாக கொண்டு வரப் பட்டது.

சதிப்புரட்சி தொடர்பாக சிறையில் வைக்கப்பட்டவர்களில் இரு இராணுவ அதிகாரிகள் தப்பி ஓடி விட்டனர்.

# மத்தியரஷ்ய குடியரசில் இனமோதல்; 200 பேர் பலி; கட்டடங்கள் சேதம்!

(மொஸ்க்கோ)

மத்திய சோவியத் குடியரசுகளான கிர்கிஷ், உஸ்பெக்ஸ் என்பனவற்றில் ஏற்பட்ட இனக்கலவரங்களினால் 200 பேருக்கு மேற்பட்டவர்கள் இறந்து விட்டதாக டாஸ் செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது. மேலும் எரிந்த நூற்றுக்கணக்கான கட்டிடங்களுக்கு இடையில் இன்னும் சடலங்கள் இருக்கலாம் எனவும் டாஸ் செய்தி ஸ்தாபனம் அச்சம் வெளியிட்டுள்ளது.

இனக்கலவரங்கள் ஏற்பட்ட பிரதான நகரங்களான ஒஸ், உஸ்பெக் என்பனதற்பொழுது இராணுவத்தின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ளன. ஆனாலும் நகரங்களிலும் சூழவுள்ள பிரதேசங்களிலும் பதட்ட நிலை தணியவில்லையென அங்கிருந்து வரும் செய்திகள் குறிப்பிடுகின்றன.

மேலும் இரு குடியரசுகளின் எல்லையோரங்களிலும் பல ஆயிரக்கணக்கான துருப்புக்கள் குவிக்கப்பட்டுள்ளன.

கிர்கிஷ்தானில் இந்த இனக்கலவரம் தோற்றம பெற்றமைக்கு கிர்கிஷ்தானில் இருந்த சிறுபான்மை உஸ்பெக்கிஸ்தானியருக்கு நில ஒதுக்கீடே காரணமாகும். கிர்கிஷ்தானில் ஏறத்தாழ 10லட்சம் உஸ்பெக்கிஸ்தானியர்கள் வாழ்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ரஷ்யாவில் பொதுவாக மத்திய குடியரசுகளில் வேலை இல்லாப் பிரச்சினையும் குடித்தொகைப் பெருக்கமும் அதிகமாகும். இதன் காரணமாக சிறுபான்மையினருக்கான ஒதுக்கீடுகளைப் பெரும்பான்மையினர் ஏற்றுக் கொள்ளாமையினாலேயே இவ் இனக் கலவரங்கள்தோன்றியுள்ளன.

தற்பொழுது இனக்கலவரம் பாதித்த இடங்களில் இருந்து சிறுபான்மையின மக்கள் ஹெலிகப்டர்கள் மூலம் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். இரு குடியரசுகளிலும் இருந்து எல்லைதாண்டி வந்து வன்செயல்களில் ஈடுபடுவதைத் தவிர்ப்பதற்காக எல்லைப் புறங்கள் மூடப்பட்டுள்ளன.

# நேபாள பிரதமர் இந்திய விஜயம்; இந்திய-நேபாள உறவில் முன்னேற்றம்

(புதுடில்லி)

நேபாளப் பிரதம மந்திரியின் இந்திய விஜயம் இரு நாடுகளுக்கும் இடையில் மீண்டும் சகஜ நிலையைத் தோற்றுவிக்க உதவியுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவிற்கு நான்கு நாட்கள் விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள நேபாள முதன் மந்திரி கிருஷ்ண பிரசாத் பட்டாராஜ் இந்தியப் பிரதமர் வி. பி. சிங்குடன் மூன்றுமுறை தனியாகச் சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளார். இப்பேச்சுவார்த்தையின்போது உதவியாளர்கள் எவரும் உடன் இருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இம் மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை என்றாலும், 1989 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இருந்து முடிவடைந்த வர்த்தக, போக்குவரத்து ஒப்பந்தங்கள் பற்றியும், தற்போதைய வர்த்தக, போக்குவரத்து உறவுகள் பற்றியும், சீனாவிடம் இருந்து நேபாளம் ஆயுதம் வாங்கியது தொடர்பாகவும். நேபாளத்தில் இருக்கும் இந்திய வம்சாவளியினர் புறக்கணிக்கப்படுவதும் முக்கியமாகப் பேசப்பட்டன எனத் தெரியவருகின்றது,

மேலும் இந்தியா வந்துள்ள நேபாள பிரதம மந்திரி பட்டாராஜ் இந்தியாவின் பல்வேறு அரசின் சட்சித் தலைவர்களையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். அதில் இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் ராஜீவ் காந்தி, பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் எல். கே. அத்வானி, ஜனதாதள்த் தலைவர் சந்திரசேகன், கம்மியூனிஸ்ட் கட்சிப் பாதுச் செயலாளர் இந்திரஜித் ஆகியோரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். அரசியல் தலைவர்களுடன் நடந்த பேச்சுவார்த்தைகள் மிகவும் சுமுகமான சூழ்நிலையில் நடைபெற்றதாகவும் தெரியவருகின்றது.

## தொழிற்சாலையில் தீ விபத்து

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் உள்ள இரசாயனத் தொழிற்சாலை ஒன்றில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தில் இருவர் படுகாயம்அடைந்தனர். இத் தொழிற்சாலையிலிருந்து எழுந்த தீச்சுவாலை ஆகாயத்தில் நூற்றுக்கணக்கான மீற்றர் தூரத்துக்கு எழுந்தது.

இதன் புகைமண்டலம் பல மைல் தூரத்தில் காணப்பட்டது.

# ஆப்கன்பிரச்சினைக்குமாஜிமன்னர் உதவ முடியும் - நஜிபுல்லாஹ்

(காபூல்)

"ஆப்கனிஸ்தானின் உள்நாட்டு, வெளிநாட்டுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் எமது நாட்டு முன்னாள் மன்னர் ஸாஹிர்ஷா கூடிய பங்காற்ற முடியும்.

இவ்வாறு ஆப்கன் ஜனாதிபதி டாக்டர் நஜிபுல்லாஹ் தெரிவித்துள்ளார்.

காபூலில் இருந்து வெளியான அறிக்கையொன்றின் பிரகாரம் ஷாவுடன் நேரடி பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள நஜிபுல்லாஹ் அரசாங்கம் முன்வருகிறது. இது தேசிய சமரஸத் திட்டத்தின் ஒரு அம்சமாகும்.

இராணுவ வட்டாரங்களிலும் மன்னர் ஸாஹிர். ஷாவுக்கு மரியாதை இருந்து வருகிறது. இதற்குக் காரணம் இவர் ஆட்சி செய்த காலத்தில் அரசியல் சுதந்திரத்திற்கு இடம் வழங்கப்பட்டமையாகும். இவரது காலத்தில் பல அரசியல் கட்சிகள் தோன்ற ஆரம்பித்தன.

1933—1973 வரை இவர் ஆண்ட காலப் பகுதியில் நாட்டில் பொருளாதார சுபீட்சம் ஏற்பட்டது.

இவர் கடைப்பிடித்த வெளிநாட்டுக் கொள்கை சர்வதேச மட்டத்தில் ஆப்கனிஸ்தானுக்கு நல்ல மதிப்பைக் கொண்டு வந்தது.

# தென்னாபிரிக்க அரசு ஐ. நா. சபைமீது கண்டனம்

(கேப்டவுண்)

தென்னாபிரிக்கா அரசு ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கையைகண்டித்துள்ளது.

இங்குள்ள அரசியல் நிலைமைகளை ஆராய்வதற்கு ஐக்கிய நாடுகள் சபை குழுவொன்று வந்திருப்பதாலேயே இவ்வாறு கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்க வெளியுறவு அமைச்சர் பிக் போத்தா இதனைக் கண்டித்திருப்பதுடன் இது தொடர்பாக ஐ. நா. பொதுச் செயலாளர் திரு. பெரஸ்டிக் செய்யாருக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளார்.

இக்குழு இங்குள்ள அரசியல் தலைவர்கள், கட்சிகள், அதிகாரிகள்ஆகியோரைச்சந்தித்து இங்குள்ள நிலைமைகள் குறித்து விபரங்கள் திரட்டவுள்ளன.

# பாகிஸ்தான் செலவீட்டில் 27 வீதம் இராணுவத்திற்கு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் அடுத்த ஆண்டிற்குரியசெலவீட்டில் 27வீதம் இராணுவத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அதேவேளை பல பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது குறிப்பாக இறக்குமதி செய்யப்படும் கார் போன்ற ஆடம்பரப் பொருட்கள் மீதும் மின்சாரம் மீதும் வரிகள் உயர்த்தப்பட்டுள்ளது இம்முறைபஜெட்டில் இராணுவச் செலவு அதிகரிப்பு 20 வீதமாகும்.

காஷ்மீர் தொடர்பாக இந்தியாவுடன் உள்ள நெருக்கடியைச் சுட்டிக்காட்டி விலை ஏற்றத்தை மக்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

## தண்டிப்பது எப்படி?

தண்டனை வழங்கப்படுவதும் குறிப்பிட்ட வரையறைக்கு உட்பட்டது. ஒரு முழத்துக்குமேல் அதிகரிக்காத பிரம்பால் மாணவர் தவறை உணர்ந்து கொள்ளுமாறு தண்டனை அமையவேண்டும். மாணவர் உள

# இரக்கமற்ற ஓர் பாடசாலை

## திருக்குறள் கூறும் தண்டனை

கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்.

ஆக்கம் நெடுங்காலம் நீங்காமலிருக்க விரும்புகின்றவர் (தண்டிக்கத் தொடங்கும்போது) அளவு கடந்து

(காபூல்)

"ஆப்கனிஸ்தானின் உள்நாட்டு, வெளிநாட்டுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் எமது நாட்டு முன்னாள் மன்னர் ஸாஹிர் ஷா கூடிய பங்காற்ற முடியும்.

இவ்வாறு ஆப்கன் ஜனாதிபதி டாக்டர் நஜிபுல்லாஹ் தெரிவித்துள்ளார்.

காபூலில் இருந்து வெளியான அறிக்கையொன்றின் பிரகாரம் ஷாவுடன் நேரடி பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள நஜிபுல்லாஹ் அரசாங்கம் முன்வருகிறது. இது தேசிய சமரஸத் திட்டத்தின் ஒரு அம்சமாகும்.

இராணுவ வட்டாரங்களிலும் மன்னர் ஸாஹிர் ஷாவுக்கு மரியாதை இருந்து வருகிறது. இதற்குக் காரணம் இவர் ஆட்சி செய்த காலத்தில் அரசியல் சுதந்திரத்திற்கு இடம் வழங்கப்பட்டமையாகும். இவரது காலத்தில் பல அரசியல் கட்சிகள் தோன்ற ஆரம்பித்தன.

1933—1973 வரை இவர் ஆண்ட காலப் பகுதியில் நாட்டில் பொருளாதார சுபீட்சம் ஏற்பட்டது.

இவர் கடைப்பிடித்த வெளிநாட்டுக் கொள்கை சர்வதேச மட்டத்தில் ஆப்கனிஸ்தானுக்கு நல்ல மதிப்பைக் கொண்டு வந்தது.

ஐ. நா. ... கண்டனம்

(கேப்டவுண்)

தென்னாபிரிக்கா அரசு ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கையைகண்டித்துள்ளது.

இங்குள்ள அரசியல் நிலைமைகளை ஆராய்வதற்கு ஐக்கிய நாடுகள் சபை குழுவொன்று வந்திருப்பதாலேயே இவ்வாறு கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்க வெளியுறவு அமைச்சர் பிக் போத்தா இதனைக் கண்டித்திருப்பதுடன் இது தொடர்பாக ஐ. நா. பொதுச் செயலாளர் திரு. பெரஸ்டிக் செய்யாருக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளார்.

இக்குழு இங்குள்ள அரசியல் தலைவர்கள், கட்சிகள், அதிகாரிகள்ஆகியோரைச்சந்தித்து இங்குள்ள நிலைமைகள் குறித்து விபரங்கள் திரட்டவுள்ளன.

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் அடுத்த ஆண்டிற்குரியசெலவீட்டில் 27வீதம் இராணுவத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அதேவேளை பல பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது குறிப்பாக இறக்குமதி செய்யப்படும் கார் போன்ற ஆடம்பரப் பொருட்கள் மீதும் மின்சாரம் மீதும் வரிகள் உயர்த்தப்பட்டுள்ளது இம்முறைபஜெட்டில் இராணுவச் செலவு அதிகரிப்பு 20 வீதமாகும்.

காஷ்மீர் தொடர்பாக இந்தியாவுடன் உள்ள நெருக்கடியைச் சுட்டிக்காட்டி விலை ஏற்றத்தை மக்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

## தண்டிப்பது எப்படி?

தண்டனை வழங்கப்படுவதும் குறிப்பிட்ட வரையறைக்கு உட்பட்டது. ஒரு முழத்துச்குமேல் அதிகரிக்காத பிரம்பால் மாணவர் தவறை உணர்ந்து கொள்ளுமாறு தண்டனை அமையவேண்டும். மாணவர் உளரீதியாகவோ உடல் ரீதியாகவோ பாதிப்படையக் கூடாது.

கல்வி அதிகாரி
எஸ் தங்கராசா

# இரக்கமற்ற ஓர் பாடசாலை அதிபரின் அராஜகம்

கரையூர் றோமன் கத்தோலிக்கத் தமிழ் கலவன் பாடசாலை என்ற பெயரில் ஒரு அரசாங்கப் பள்ளிக்கூடம் குடத்தனையில் அமைந்துள்ளது. அறுபது வயதை ஆடி மாதம் 14 ஆம் திகதி 1990 ல் முடித்து ஓய்வு பெறவிருக்கும் திரு. தோ. செபமாலை அங்கு தலைமை ஆசிரியராகக் கடமையாற்றுகிறார்.

அண்மையில் குடத்தனை கரையூர் றோ. க. த. க. பாடசாலையில் நடந்த ஒரு நிகழ்ச்சி இது-

பள்ளிக்கூடத்தில் இரு சிறுவர்களுக்கிடையில் சண்டை. அடிபட்டமாணவர்களில் ஒருவனுக்கு ஒரு அண்ணனுண்டு. அவன் பெயர் விமலதாஸ், தம்பிக்கு அடித்தவனுக்கும் விமலதாசுக்கும் சண்டை மூண்டுள்ளது. இது சகோதர பாசம், இரததம் தண்ணீரை விடத் தடிப்பானதாம். அவ்வளவு தான்!

சண்டையை (யுத்தமல்ல) தூரத்தில் நின்று கவனித்த தலைமை ஆசிரியர், தமக்கிடையில் சண்டை போட்ட சிறார்களைத் தன் காரியாலயத்தில் உடன் ஆஜராகும்படி பணித்துள்ளார். ஆபத்து வந்தது என்று எண்ணி ஒருவன் எங்கேயோ ஓடித்தப்பி விட்டான். அவனைப்பார்த்து விமலதாஸ் சும் ஓடியிருக்கிறான். பள்ளிக்கூடததில் குருஷேத்திரப் போர் நடந்து கொண்டிருக்கிறது என்ற எண்ணமோ,என்னமோ தலைமை ஆசிரியர் செபமாலை விமலதாஸின் சகபாடிகளான ஐந்து மாணவரை ஏவி விட்டு, அவனை மடக்கிபபிடித்து இழுத்து வந்து அலுவலகத்தில் வைத்துத் தண்டித்துளளார். கல்வி உளவியலில் தண்டனையும் பரிசும் உடன் வழங்கப்பட வேண்டியவை தான். ஆறப் போடாமல் தலைமை ஆசிரியரும் தண்டனையை உடன் வழங்கியுள்ளார். இது சாதனை என்றாலும், இந்நிகழ்ச்சியில் 'அதிவிஷ்டம்' என்னவென்றால், தலைமை ஆசிரியருக்குப் பயத்தினால் விமலதாஸ் குறுகிப் போய் அமர்ந்திருந்த சமயம், செபமாலை அதிகாரத்தின் அட்டகாசத்தைக் சாட்டியிருக்கிறார். அந்தச் சிறுவனுக்குத் தலைமை ஆசிரியர் தண்டனை என்ற பெயரில் வழங்கிய தடி அடியால் அவனது கால் சிதைந்து போய் உள்ளது. பிராணி வதைத் தடுப்புச் சட்டம்போல் குழந்தைவதைத் தடுப்புச் சட்டம் போட்டால், ஒரு வேளை குழந்தைகள் காப்பாற்றப் படலாம்.

விமலதாஸ் வீட்டுக்கு ஈழநாதம் செய்தியாளர் சென்று சேகரித்த தகவல்கள் வருமாறு;

வானம்பார்த்தவறண்டபூமியில்வாழ்ந்து வரும் விமலதாஸ்ஸின் பெற்றோர் சாதாரணத் தமிழ்க் குடிமக்கள். அன்றாடம் தமது ஜீவனோபாயத்துக்கு மீன்பிடித் தொழிலை நம்பி வாழ்கின்றனர். குடும்பத்தில் மொத்தம் ஏழு பிள்ளைகள். மூத்தவன் சிறுவயதில் வீதி விபத்தொன்றில் இறந்து போனான். இப்பொழுது குடும்பத்தில் ஆறு பிள்ளைகளே உள்ளனர்.ஆண்களில் விமலனே மூத்தவன். இவனுக்கு ஓர் அக்காவும் இளையவர்களான சகோதர சகோதரிகளும்உள்ளனர்.

தலைமை ஆசிரியர் செபமாலை சம்பவதினத்தன்று மே 24 ஆம் திகதி துடியாட்டம் செய்த விமலதாஸ்ஸுக்கு பூவரசந்தடியால் புறங்காலில் பலமாக அடித்துள்ளார்இவர் அடிக்கும் பொழுது தடி முறிந்து விட்டது. மனித நேயத்தை மறந்து தொடர்ந்தும் முறிந்த தடியால் அடித்துள்ளார்.மாடடுக்கடித்த அடி என்பார்களே அப்படித்தான். தண்டனையை அனுபவித்துக் கொண்டுவீட்டுக்குச் செல்லும் போது விமலதாஸ் நடக்கமுடியாமல் நொண்டி நொண்டி தன் சகோதரனின் தோளில் தாங்கியபடி சென்றுள்ளான்.

ஆயிரமானாலும்ஆசிரியருக்குஎதிராகமுறைப்பாடு செய்ய விரும்பாத பெற்றோர் மகனின் காலில் வீக்கத்தைக் கண்டதும் புக்கை கட்டியுள்ளார்கள். வேதனை தாங்காமல் மகன் அலறவே சிறிதுநேரத்தில் புக்கையை அவிழ்த்துவிட்டுள்ளனர்.ஆனால் அடிபட்ட இடம் வீங்கத் தொடங்கியது. புறங்காலில் கண்டல் பட்ட இடத்தில் பெரிய தொப்பளம் வந்துடைந்தது, அது புண்ணாக்கி விமலதாஸ் மூன்றாம் நாள் மந்திகைஆஸ்பத்திரியில் வைத்திய சிசிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.



தண்டனைக்குள்ளான விமல்தாஸ் தாயாருடன் ஆஸ்பத்திரி வார்ட்டில்; பிரான்சு நாட்டு டாக்டர்களுடன் சேவையாற்றும் (மத்தியில் நிற்பவர்) உள்ளூர் டாக்டர்.

### மாணவன் தாக்கப்பட்டது மனிதநேயத்துக்கு அப்பாற்பட்டது

மாணவன் பாடசாலையில் தாக்குதலுக்குள்ளானது மனித நேயத்துக்கு அப்பாற்பட்ட செயலாகும். அத்துடன் மாணவனின் காலில் இத்தகைய பின் விளைவு ஒன்று ஏற்பட பிரதான காரணம் தடியடி என்பதை உறுதியாகக் கூறலாம்.

வைத்திய நிபுணர் ஜீன் மாசேல்

### வைத்தியநிபுணர்கருத்து

மந்திகை ஆஸ்பத்திரியில் 1988 ஆம் ஆண்டு முதல் சடமையாற்றி வரும் பிரான்ஸ் நாட்டு வைத்திய நிபுணர் ஜீன் மாஷேல் பின்வருமாறு தெரி

(4ஆம் பக்கம் பார்க்க)

## திருக்குறள் கூறும் தண்டனை

கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்.

ஆக்கம் நெடுங்காலம் நீங்காமலிருக்க விரும்புகின்றவர் (தண்டிக்கத் தொடங்கும்போது) அளவு கடந்து செய்வ... போல் காட்டி அளவுமீறாமல் முறைசெய்ய வேண்...

## தலைமை ஆசிரியரின் குற்றச்சாட்டும் ஆசிரியரின் விளக்கமும்

31 - 05- 1990இல் ஈழநாதத்தில் வெளியான குடத்தனை றோ. க. த. க. பாடசாலை தலைமை ஆசிரியர் தோ. செபமாலை பற்றிய செய்திக்கு அவர் எழுதிய மறுப்பும் எமது விளக்கமும்.

1971ஆம் ஆண்டு முதல் 2ஆம் தர அதிபராகவும் கடமை புரிகிறேன். அதுமட்டுமன்றி நான் இலங்கை ஆசிரியர் சங்க பருத்தித்துறை கிளைத் தலைவராகவும், யாழ். மாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்க வட்டாரக் கிளைத் தலைவராகவும் பணியாற்றுகிறேன்.

★ ஒரே நேரத்தில் திரு. தோ. செபமாலை இரு தொழிற்சங்கங்களில் பதவி வகிப்பது தொழிற்சங்க நியமங்களுக்குப் பொருந்துமோ இல்லையோ தனது மறுப்பில் தொழிற்சங்கங்களின் பெயர்களைச் சந்திக்கு இழுத்தமை, தொழிற்சங்கங்களை அவர் ஒரு கவசமாகப் பாவிப்பதற்காகப் போலும். 1951ஆம் ஆண்டிலிருந்து ஆசிரியத் தொழிலில் இருக்கும் இவர் தமது நாணயத்தை நிரூபிப்பதற்காகத் தனது தொழிற்சங்க ஈடுபாடுகளைச் சுட்டிக் காட்ட வேண்டியதில்லை.

2. இரு மாணவர்களிடையே ஏற்பட்ட கைகலப்பினால் ஒருவர் கல்லெடுத்து மற்றவருக்குக் குத்துவதற்காகத் துரத்தினார் .. குற்றத்தை உணர்த்திப் பூவரசந்தடியால் அவரின் கீழ்க்காலில் நாலு ஐந்து அடி அடித்தேன்.

★ பூவரசந்தடியால் உடம்பில் தான் விரும்பிய பாகத்தில் ஓர் ஆசிரியர் மாணவரைத் தாக்க முடியாது.அடிப்பதற்கு சில விதிமுறைகள் உண்டு. இங்கு பிரசுரமாகியிருக்கும் கல்வி அதிகாரி எஸ். தங்கராசாவின் பதில் இவரது கண்களைத் திறக்க வேண்டும்.

3.... அறையில் பூட்டி வைத்து கதிரையின் மேல் காலைத் தூக்கி வைத்து கொட்டனால் கதறக் கதற தாக்குதலை மேற்கொண்டதாக அபாண்டமான வார்த்தைகளைப் பயன்படுத்தி ஈழநாதம் பத்திரிகை என்னை மட்டுமல்ல ஆசிரிய சமுதாயத்தையே வசை பாடி விட்டது.

★ அடி பாரதூரமில்லாவிட்டால் 2 வாரங்களுக்கு அதிகமாகத் தாக்குதலுக்குள்ளான மாணவன் இன்றுவரை மருத்துவ மனையில் இருக்க வேண்டிய அவசியமில்லை. விமல்தாசுக்கு சிகிச்சை வழங்கும் டாக்டர்களின் விளக்கம் பிரசுரமாகிறது. அதைப் படிக்கவும்.

4. நரம்புகள் எவையும் பாதிக்கப்படவில்லை என்றும், எலும்பு உடைந்ததற்கான எந்தவிதமான அறிகுறிகளும் இருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ அந்த வைத்தியசாலையில் இருந்து தலைமை ஆசிரியர் அறிக்கையை எடுத்தாரோ தெரியவில்லை. மேலும் வைத்திய அறிக்கைக்கு விளக்கம் கொடுப்பதற்கு இவர் வாத்தியாரே தவிர வைத்தியர் இல்லை.

— ஆசிரியர்

# வீடமைப்புத்திட்டத்தில் வீடு பெற்றுத்தருவதாக மோசடி

(கொழும்பு)

கொத்தலாவலபுர அரசாங்க வீடமைப்புத்திட்டத்தில் வீடுகள் பெற்றுத் தருவதாகக் கூறி, பல ஆயிரம் ரூபா கைலஞ்சம் வேண்டியதாகக் குற்றம் சாட்டி கொழும்பு உயர் நீதிமன்றத்தில் ஒருவர் மீது 24 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

முன்னால் கொத்தலாவலபுர யு.என்.பி. செயலாளரான டொன் ஜெகத் அனுரா என்ற இந்த நபர், வீடுகளைப் பெற்றுத் தருவதாகக் கூறி ஒவ்வொருவரிடமும் ரூபா 15,000 முதல் ரூபா 20,000வரை லஞ்சமாகப் பெற்றுள்ளார். இவ்வகையில் மொத்தம் ரூபா 2,50,000 லஞ்சமாகப் பெற்றுள்ளார் என்று வழக்காளி தரப்பில் சொல்லப்படுகிறது.

கல்கிசை-மவுண்ட்லெவனியா மேயரின் பெயரை இவ்விஷயத்தில் சம்பந்தப்படுத்தித் துஷ்பிரயோகம் செய்ததோடு போலியான ஆவணங்களையும் வைத்திருந்துள்ளார்.

1983 இல் குற்றவாளிக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, பூர்வாங்க விசாரணையின் பின் இவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். இதுவரைகாலமும் குற்றம் சுமத்தப்பட்ட டொன் ஜெகத் அனுரா தலைமறைவாகி விட்டதால் வழக்கைத் தொடர முடியவில்லை. சமீபத்தில் லஞ்சத் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றத்தில் பிடியாணை எடுத்து இவரைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்துள்ளனர்.

இவரை மடக்கிப் பிடித்த சமயம் நஞ்சருந்திதற்கொலை செய்ய முயற்சித்தாராம்.

மேற்படிநபர்லஞ்சம்வேண்டுவதற்கு தகப்பனார் உடந்தையாக இருந்தார் என்று காரணங்காட்டி, சில வழக்குகளில் தகப்பனார் இரண்டாவது எதிரியாகக் காட்டப்பட்டுள்ளார்.

# மூளைக்காய்ச்சல் இளம்பெண் மரணம்

(மானிப்பாய்)

மூளைக்காய்ச்சல் நோயால் மானிப்பாய் மேற்கைச்சேர்ந்த 22 வயது இளம்பெண் ஒருவர் மரணம் அடைந்துள்ளார்.

மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் நடன ஆசிரியையாக கடமையாற்றும் இவர் மூளைக்காய்ச்சல் நோய் காரணமாக அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். ஆனால் சிகிச்சை பலனளிக்கவில்லை. இவர் நேற்று முன்தினம் மரணமானார்.

# விளையாட்டுப் போட்டியால் உயர்ந்த பழக்கம் ஏற்படும்

(கொழும்புத்துறை)

வெற்றியையும் தோல்வியையும் சமமாக மதிக்கத்தக்க மனப்பக்குவத்தை விளையாட்டுப் போட்டிகளே ஏற்படுத்தும் உடற்சுகம், மனச்சுகம், நேர்மை, ஒழுக்கம், ஒற்றுமை, கட்டுப்பாடு போன்ற உயர்ந்த பழக்க வழக்கங்களையும் விளையாட்டுப் போட்டிகள் சிறார்களுக்கு ஏற்படுத்தும். முன்மாதிரியாக மூன்று பாடசாலைகளும் ஒன்றிணைந்து நடாத்தும் இவ் விளையாட்டுப் போட்டி ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

இவ்வாறு யாழ் சர்வோதயத்தின் கீழ் இயங்கும் கொக்குவில் காந்திஜீ பாலர் பாடசாலை, பாரதி பாலர் பாடசாலை, வராகி பாலர் பாடசாலை ஆகிய மூன்றும் ஒன்றிணைந்து நடாத்திய மெய்வல்லுனர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றிய நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு ஆ. மகாலிங்கம் கூறினார்.

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாலய அதிபர்திரு, கா. கணேசதாசன் மங்கள விளக்கேற்றி அணிநடை மரியாதையையும் ஏற்றார்.

யாழ்.சர்வோதய போதனாசிரியை திருமதி கோமதி ரவிதாஸ் தலைமையில் போட்டிகள் நடைபெற்றன. ஆனைக்கோட்டை உயரப்புல வித்தியாலய அதிபர் க. திருநாவுக்கரசு கொக்குவில் கிராம சேவையாளர் வசந்தகுமார் யாழ்.தமிழீழ விடுதலைபுலிகள் இயக்கப் பொறுப்பாளர் பொன் மாஸ்ரர் ஆகியோர் சிறப்புரையாற்றினார். (24)

# புதிய அதிபர்

(தீவுப்பகுதி)

அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாசாலையில்அதிபராக கடமையாற்றி வந்த திரு. ஆ. அருமைநாயகம் அவர்கள் இம் மாதம் முதலாந் திகதி தொடக்கம் (01. 06. 1990) வேலணை சரஸ்வதி வித்தியாசாலையின் அதிபராகநியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்பு இதே பாடசாலையில் அதிபராக கடமையாற்றியிருந்தார். வேலணை சரஸ்வதி வித்யசாலையின் பழைய மாணவரான இவரது புதிய நியமனம் பெற்றோர் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. (15)

# கழக கிரிக்கெட் போட்டி; எவருக்கும் வெற்றியில்லை

(யாழ். விளையாட்டு நிருபர்)

அரியாலை மத்திய விளையாட்டுக் கழகத்திற்கும் யாழ்ப்பாணம் செயின்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் அண்மையில் நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

முதலில் ஆடிய அரியாலை அணியினர் 169 ஓட்டங்களைப் பெற்றனர். அகிலன் 75, றொமேஸ் 26, வர்னேந்திரா 17 ஓட்டங்களைப் பெற்றனர். ஞானசேகரன் 5 விக்கெட்டுகளையும் ஸ்ரீதரன் அருணோதயன் இருவரும் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

செயின்ஸ்அணி தனது முதல் இனிங்ஸில் 69 ஓட்டங்களைப் பெற்றது. உதயன் 14, முகுந்தன் 12 ஓட்டங்களைப் பெற்றனர். குகனேந்திரா 6 விக்கெட்டுகளையும் அகிலன் 3விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து ஆடப் பணிக்கப்பட்ட செயின்ஸ் அணியினர் 6 விக்கெட் இழப்பிற்கு 113 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது. ஸ்ரீதரன் ஆட்டமிழக்காமல் 28, முகுந்தன் 12 ஓட்டங்களைப் பெற்றனர். குகனேந்திரா, வர்னேந்திரா இருவரும் தலா 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர். (42)

# ரெலோவின் மாநாடு

(கொழும்பு)

இம்மாத முடிவில் ரெலோ இயக்கம் கொழும்பில் மாநாடு ஒன்றை நடத்தவுள்ளது. இம்மாநாட்டிற்கு முதலில் முஸ்லிம் காங்கிரஸ் உட்பட தமது தோழமைக்கட்சிகளான ஏழு கட்சிகளையும் ரெலோ இயக்கம் அழைத்திருக்கிறது. தற்பொழுது இம் மாநாட்டின் அழைப்புக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், ஈரோஸ் இயக்கத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பு பொதுநூலக மேலதிகவிஸ்தரிப்புச்சேவை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பொது நூலக மேலதிக விஸ்தரிப்புச் சேவையின் கீழ் மாணவர்களின் நலன் கருதி பல நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மேலதிக விஸ்தரிப்புச்சேவைமூலம் நடத்தப்பட்டு வரும் நிகழ்ச்சிகளில் சிறுவர்கதைவேளை, இலக்கிய வகுப்பு, திறமைமிக்க மாணவர்களைக் கௌரவித்தல். பலவித போட்டிகள் நடாத்தி பரிசில் வழங்கல் முதலியன அடங்கும்.

சிறுவர் கதை வேளை இலக்கிய வகுப்பு ஆகியவற்றுக்கு கலைஞர், மாஸ்டர், சிவலிங்கம் பொறுப்பாசிரியராகப்பணிபுரிகின்றார். சிறுவர் கதை வேளை நிகழ்ச்சி, பொது நூலகத்தின் கிளை வாசிகசாலைகளான கோட்டமுனை வாசிகசாலை, கல்லடி வாசிகசாலை, நாவற்குடா வாசிகசாலை, மருதடி வாசிகசாலை, அமிர்தகழி வாசிகசாலை, ஆகியவற்றில் வாரந்தோறும் நடைபெற்று வருகின்றது.

பிள்ளைகளுக்கு மாஸ்டர் சிவலிங்கம் இராமாயணம், பாரதம், மற்றும் குட்டிகதைகள் கூறுவதுடன் திருக்குறளும் போதித்து வருகின்றார். கதை கேட்கும் பிள்ளைகளின் நிகழ்ச்சிகளையும் [illegible] மையை வெளிக்கொணருகின்றார்.

மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குள் இருக்கும் பாடசாலை பலவற்றுக்கு பொது நூலகத்தால் மாஸ்டர் சிவலிங்கம் அனுப்பப்படுகின்றார் அங்கு அவர் இராமாயணம், மகாபாரதம், அரிச்சந்திரன் கதை, போன்றவற்றைக்கூறி வருகின்றார்.

இந்தக் கதை வேளை நிகழ்ச்சி நிரல் பொதுநூலகர் திரு. சி. சின்னராசாவால் மாதாமாதம் தயாரிக்கப்படுகின்றது.

பொதுநூலகம், கல்லடி வாசிகசாலை, அமிர்தகழி வாசிகசாலை, ஆகியவற்றில் க.பொ.த சாதாரண மாணவர்களுக்கான இலக்கியவகுப்பு வாரந்தோறும் நடத்தப்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். மாணவர்களுக்குப் பயன்தரவல்ல மேலும் சில நல்ல திட்டங்களை மாநகர ஆணையாளர் திரு. கே. கார்த்திகேசுவின் அனுசரணையுடன் நூலகர் திரு. சி. சின்னராசா தயாரித்து வருகின்றார்.

பொதுநூலக மேலதிக விஸ்தரிப்புச் சேவைக்கு மாநகர சபை யுனிசெப் நிறுவனம், லயன்ஸ் கழகம், சர்வோதய இயக்கம் போன்றவை நிதி

# எயிட்ஸிற்கு புதியதோர் வைத்திய முறை

அற்லாண்டாவில் மருத்துவமனை ஒன்றில் எயிட்ஸ் நோயாளி ஒருவருக்கு வழங்கப்பட்ட சிகிச்சையின் பிறகு நூற்றுக்கணக்கான எயிட்ஸ் நோயாளிகள் அந்த மருத்துவமனையை நோக்கிப் படையெடுக்கிறார்களாம். ஆனால் நோயாளிக்குச் சிகிச்சைசெய்த டாக்டர்கள் நோயாளி குணப்படுவாரோ என்பதுபற்றிச் சந்தேகம் கொண்டுள்ளார்கள். சிகிச்சை பெற்ற அற்லாண்டாவைச்சேர்ந்த ஹொட்டல்பணியாளரான கார்ல் கிறாபோட் (வயசு-33) தான் சுகமடைந்துவிட்டதாகத் தெரிவித்துள்ளார். மற்றொரு நோயாளிக்கும்இதேமுறையைப்பின்பற்றி சிகிச்சை அளிக்கப் போவதாக புதனன்று டாக்டர்கள் தெரிவித்தார்கள்.

ஹைபர்தெமியா என்ற முறையைப் பின்பற்றியே கார்ல் கிறாபேர்ட்டுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது இம்முறைப்படி நோயாளியின் இரத்தத்தை ஒரு அளவுக்குச் சூடுகாட்டி நோய்க் கிருமிகள் சாகடிக்கப்படுகின்றன.

கான்சர் நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கப் பயன்படுத்தப்படும் பெரும் சர்ச்சைக்குரிய இம் முறையைப் பின்பற்றியே கடந்த பெப்ரவரிமாதம் கார்ல்கிராபேர்ட்டுக்கும் சிகிச்சையளிக்கப்பட்டது.

கார்லுக்கு மயக்க மருந்து கொடுத்து அவரின் இரத்தத்தை உறிஞ்சி எடுத்து இரத்தத்தின் உஷ்ணநிலை அளவை 44சென்ரிக்கிரேட்டுக்குக்கூட்டி மறுபடியும்உடம்பில் பாய்ச்சப்படுகிறது. இதனால் இவரது உடல் உஷ்ணநிலை அளவு 42 டிகிரியில் வைக்கப்படுகிறது.

இரண்டு மணிநேரங்கள் நடந்த சிகிச்சையின் பிறகு உடல்நிலை நன்றாக இருப்பதாகவும், தான் புதியசக்தியை பெற்றிருப்பதாகவும் கார்ல் தெரிவித்தார்.

# யானை தாக்கி மரணம்

(அம்பாறை)

அம்பாறைநகருக்குள் கடந்த வெள்ளி அதிகாலை புகுந்த காட்டு யானை செ. தர்மதாஸா (வயது 30) என்பவரைக் கொன்றதோடு டி. பியதாஸா வயது35) என்பவரைஅடித்துப் பலத்த காயத்துக் குள்ளாக்கியது. இச்சம்பவம் அம்பாறை மத்திய கல்லூரிக்கு அருகாமையில் நடந்துள்ளது.

அடிக்கடி அம்பாறை நகருக்குள் யானைகள் புகுந்து அட்டகாசம் செய்தாலும்,வனமிருகங்கள் பாதுகாப்புத் திணைக்களம் யானைகளைக் காட்டுக்குள் துரத்துவதற்கு நடவடிக்கைஎடுப்பதில்லை எனஅம்பாறைநகரவாசிகள் குறைபாடு கொள்கிறார்கள்.

## இரக்கமற்ற

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

வித்தார்: மாணவனின்காலில் ஏற்பட்டுள்ள காயங்களுக்கு அந்த ஆசிரியர் வழங்கிய தண்டனையே 90 விகிதமான காரணமாகும். மிகுதி 10 விகிதமும் பெற்றோரின் கவனமின்மையால் ஏற்பட்டது. தகுந்த வைத்தியரிடம் காட்டாமல் வீட்டில் சில நாட்கள் வைத்திருந்தது பெற்றோரின் தவறாகும். இவ்வாறு மாணவன் பாடசாலையில் தாக்குதலுக்குள்ளானது என்பது மனித நேயத்துக்கு அப்பாற்பட்ட செயலாகும். இப்படி ஓர் தலைமை ஆசிரியர் நடந்திருக்கவே கூடாது. அத்துடன் மாணவனின் காலில் இத்தகைய பின்விளைவு ஒன்று ஏற்பட பிரதான காரணம் தடியடி என்பதை உறுதியாகக் கூறலாம்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் எமது நாட்டில் (பிரான்ஸ்) இப்படியான ஒரு சம்பவம் நடந்திருக்குமானால் தலைமை ஆசிரியர்மீது வழக்குத் தொடரப்படும் என்றார். இச் சமயம் விமலதாஸ் அனுமதிக்கப் [illegible] கூட இருந்தனர்.

**கல்வி அதிகாரி எஸ் தங்கராசா**

★ தெய்வந்துறை முதல் யாழ்ப்பாணம் வரை நீண்டகாலம் ஆசிரியராகப் பணியாற்றி, ஈழ் கல்வித் திணைக்களத்தில் கல்வி அதிகாரியாகப் பணியாற்றும் எஸ். தங்கராசாவைச் சந்தித்தபோது -

ஆசிரியர் ஒரு மாணவனைத் தண்டிக்கும்பொழுது உடல் ரீதியாகவோ. உளரீதியாகவோ மாணவனுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் பழிக்குப் பழிவாங்கும் எண்ணத்துடன் தண்டிக்காது, சாதி சமய வேறுபாடின்றி அவனை நல்வழிப்படுத்தும் வகையில் தண்டனை வழங்க வேண்டும் என்றார்.

இடைமறித்து திரு. தங்கராசாவிடம் இக்குற்றத்துக்கு தண்டனை எப்படி அமையும்? என்று கேட்டபோது,

தற்போது உளவியலுடன் கூடிய கல்விமுறை மிகவும் வித்தியாசமானது. ஒரு மாணவன் தாக்கப்பட்டு, ஆசிரியர் மீது நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்து

# மும்மொழிப் பயிற்சி மொழிப் பிரிவு

(கொழும்பு)

சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் அரச ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்கும் மொழிப்பிரிவு இன்று முதல் இயங்கும்.

கொழும்பு - 7, சுதந்திர சதுக்கத்தில் அமைந்துள்ள பொது நிர்வாகம், மாகாண சபைகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக் கட்டிடத்தில் இந்த மொழிப் பயிற்சிப் பிரிவு இயங்கும்.

அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா இன்றைய தினம் பகல் 10 . 45 க்கு இப் பிரிவை ஆரம்பித்து வைப்பார்.

அரசாங்கம் ஏற்கனவே தீர்மானித்தபடி பயிற்சிகள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் நடைபெறும்.

# கிளிநொச்சியில் சிறுபோகத்திற்கு புதிய இன நெல் அறிமுகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 30 ஏக்கர் நிலத்தில் புதிய இன நெல் ஒன்று இம்முறை சிறுபோகத்தின்போது விதைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலபோகத்தின் போது கிளிநொச்சி மாவட்ட திரு. மு. கந்தசாமியினால் முரசுமோட்டை 2ஆம் யூனிற்றில் உள்ள அவரது விவசாயப் பண்ணையில் விதைக்கப்பட்டு ஏக்கருக்கு 125 புசல் விளைச்சலைப் பெற்று கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திரு. ரி. ஏ. தம்பி அப்பாவினால் உத்தியோகபூர்வமாகப் பாராட்டப்பட்ட ஏ.ரி.85/1(3 முதல் 3 1/2 மாத

ஆகிய மும்மொழிகளிலும் அரச ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்கும் மொழிப்பிரிவு இன்று முதல் இயங்கும்.

கொழும்பு - 7, சுதந்திர சதுக்கத்தில் அமைந்துள்ள பொது நிர்வாகம், மாகாண சபைகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக் கட்டிடத்தில் இந்த மொழிப் பயிற்சிப் பிரிவு இயங்கும்.

அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா இன்றைய தினம் பகல் 10 . 45 க்கு இப் பிரிவை ஆரம்பித்து வைப்பார்.

அரசாங்கம் ஏற்கனவே தீர்மானித்தபடி பயிற்சிகள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் நடைபெறும்.

சாங்க அதிபர் திரு ஆ. மகாலிங்கம் கூறினார்.

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாலய அதிபர்திரு, கா. கணேசதாசன் மங்கள விளக்கேற்றி அணிநடை மரியாதையையும் ஏற்றார்.

சாலையில் அதிபராக கடமையாற்றியிருந்தார். வேலணை சரஸ்வதி வித்தியசாலையின் பழைய மாணவரான இவரது புதிய நியமனம் பெற்றோர் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. (15)

# கிளிநொச்சியில் சிறுபோகத்திற்கு புதிய இன நெல் அறிமுகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 30 ஏக்கர் நிலத்தில் புதிய இன நெல் ஒன்று இம்முறை சிறுபோகத்தின்போது விதைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலபோகத்தின் போது கிளிநொச்சி மாவட்ட திரு. மு. கந்தசாமியினால் முரசுமோட்டை 2ஆம் யூனிற்றில் உள்ள அவரது விவசாயப் பண்ணையில் விதைக்கப்பட்டு ஏக்கருக்கு 125 புசல் விளைச்சலைப் பெற்று கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திரு. ரி. ஏ. தம்பி அப்பாவினால் உத்தியோக பூர்வமாசப் பாராட்டப்பட்ட ஏ.ரி.85/1(3 முதல் 3 1/2 மாத சிகப்பரிசி நோய்த்தாக்கம் குறைந்ததும், பசளை, கிருமிநாசினி குறைவாகப் பாவிக்கக் கூடியதும்) ரக நெல்லே இம்முறை பரவலாக பல கிராமங்களிலும் விதைக்கப்பட்டுள்ளன.

இதை முறையாகப்பார்வையிட்டு அறுவடையின்போது தமக்குக் கிடைக்கும் நெல்லை ஏனையோருக்கும் விதை நெல்லாக வழங்குவதன் மூலம் தமிழீழ மக்களின் உணவு உற்பத்தியைப் பெருக்கி தன்னிறைவு காணமுடியுமென சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (49)

பரிசில் வழங்கல் முதலியன அடங்கும்.

சிறுவர் கதை வேளை இலக்கிய வகுப்பு ஆகியவற்றுக்கு கலைஞர், மாஸ்டர், சிவலிங்கம் பொறுப்பாசிரியராகப்பணிபுரிகின்றார். சிறுவர் கதை வேளை நிகழ்ச்சி, பொது நூலகத்தின் கிளை வாசிகசாலைகளான கோட்டமுனை வாசிகசாலை, கல்லடி வாசிகசாலை, நாவற்குடா வாசிகசாலை, மருதடி வாசிகசாலை, அமிர்தகழி வாசிகசாலை, ஆகியவற்றில் வாரந்தோறும் நடைபெற்று வருகின்றது.

பிள்ளைகளுக்கு மாஸ்டர் சிவலிங்கம் இராமாயணம், பாரதம், மற்றும் குட்டிகதைகள் கூறுவதுடன் திருக்குறளும் போதித்து வருகின்றார். கதை கேட்கும் பிள்ளைகளின் நிகழ்ச்சிகளையும் நடாத்தி அவர்களின் திற

சி. சின்னராசாவால் மாதாமாதம் தயாரிக்கப்படுகின்றது.

பொதுநூலகம், கல்லடி வாசிகசாலை, அமிர்தகழி வாசிகசாலை, ஆகியவற்றில் க.பொ.த சாதாரண மாணவர்களுக்கானஇலக்கியவகுப்பு வாரந்தோறும் நடத்தப்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். மாணவர்களுக்குப் பயன்தரவல்ல மேலும் சில நல்ல திட்டங்களை மாநகர ஆணையாளர் திரு. கே. கார்த்திகேசுவின் அனுசரணையுடன் நூலகர் திரு. சி. சின்னராசா தயாரித்து வருகின்றார்.

பொதுநூலகமேலதிக விஸ்தரிப்புச் சேவைக்கு மாநகர சபை யுனிசெப் நிறுவனம், லயன்ஸ் கழகம், சர்வோதய இயக்கம் போன்றவை நிதி உதவி வழங்கிவருகின்றன.

றோரின் கவனமின்மையால் ஏற்பட்டது. தகுந்த வைத்தியரிடம் காட்டாமல் வீட்டில் சில நாட்கள் வைத்திருந்தது பெற்றோரின் தவறாகும். இவ்வாறு மாணவன் பாடசாலையில் தாக்குதலுக்குள்ளானது என்பது மனித நேயத்துக்கு அப்பாற்பட்ட செயலாகும். இப்படி ஓர் தலைமை ஆசிரியர் நடந்திருக்கவே கூடாது. அத்துடன் மாணவனின் காலில் இத்தகைய பின்விளைவு ஒன்று ஏற்பட பிரதான காரணம் தடியடி என்பதை உறுதியாகக் கூறலாம்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் எமது நாட்டில் (பிரான்ஸ்) இப்படியான ஒரு சம்பவம் நடந்திருக்குமானால் தலைமை ஆசிரியர்மீது வழக்குத் தொடரப்படும் என்றார். இச் சமயம் விமலதாஸ் அனுமதிக்கப்பட்டுள்ள இரண்டாவது வாட்டுக்கு பொறுப்பான வைத்திய அதிகாரி விமலின் கால் நிலைமை பற்றி விபரித்த பொழுது, பாடசாலை அதிபர் காலில் அடிப்பதற்கு முன்பு இந்த நோயாளிக்கு ஏதாவது காயங்கள் இருந்ததற்கான அறிகுறிகள் எதுவும் தெரியவில்லை. நாம் எக்ஸ்ரே படம் பிடித்து பார்த்தபோது கால் எலும்புகளில் சில உடைவுகள் இருப்பதற்கான சில அறிகுறிகள் தெரிந்ததால் இதனை மேலும் ஆராய்வதற்காக Radiologistக்கு அனுப்பி உள்ளோம் என்றார். இதே வேளை இந்த நோயாளி வைத்தியசாலையில் அனுமதிக்கும் பொழுது இவரது காலில் சிதழ்கூட்டி இருந்தது.

டாக்டர் ஜீன் மாஷேலுடன் மற்றொரு பிரான்ஸ் நாட்டு டாக்டர் மைக்கேலும் வார்ட் 2-இன் வைத்திய அதிகாரி டாக்டர் சி. சுரேஸ்குமாரும்

கூப் பணியாற்றும் எஸ். தங்கராசாவைச் சந்தித்தபோது -

ஆசிரியர் ஒரு மாணவனைத் தண்டிக்கும்பொழுது உடல் ரீதியாகவோ. உளரீதியாகவோ மாணவனுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் பழிக்குப் பழிவாங்கும் எண்ணத்துடன் தண்டிக்காது, சாதி சமய வேறுபாடின்றி அவனை நல்வழிப்படுத்தும் வகையில் தண்டனை வழங்க வேண்டும் என்றார்.

இடைமறித்து திரு. தங்கராசாவிடம் இக்குற்றத்துக்கு தண்டனை எப்படி அமையும்? என்று கேட்டபோது,

தற்போது உளவியலுடன் கூடிய கல்விமுறை மிகவும் வித்தியாசமானது. ஒரு மாணவன் தாக்கப்பட்டு, ஆசிரியர் மீது நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்து அவர் குற்றவாளியாகக் காணப்படும் பட்சத்தில் இவர் அரசங்க உத்தியோகத்தர் என்ற முறையில் தொழிலை இழக்க வேண்டி நேரிடும் என்று தெரிவித்த கல்வி அதிகாரி, தண்டனை வழங்கப்படுவதும் குறிப்பிட்ட வரையறைக்கு உட்பட்டது. ஒரு குறிப்பிட்ட அளவு - ஒரு முளத்துக்கு அதிகரிக்காத பிரம்பினால், மாணவன் தான் செய்த தவறை உணர்ந்து கொள்ளுமாறு தண்டனை அமைய வேண்டும். முன்பெல்லாம் தாம் படிக்கும்போது ஓர் பிரம்பும், ஒரு பிரம்புப் புத்தகமும் இருக்கும் இப் புத்தகத்தில் தண்டனை வழங்கப்பட்ட காரணம், தண்டனை பெற்ற மாணவனின் பெயர், வழங்கிய ஆசிரியரின் பெயர் ஆகியன குறிக்கப்படும் இந்தப் 'பிரம்புப் புத்தகம்' வாராந்தம் அதிபரின் பார்வைக்குச் சமர்ப்பிக்கப்படும் என்றார்.

# பன்றிக்கு வைத்த சூறி கண்ணுக்கே பட்டது!

(யாழ்ப்பாணம்)

மிளகாய்த் தோட்டத்துக்கு நாசம் விளைவிக்க வந்த பன்றிக்கு குறிவைத்தவர் தன் கண்ணைப் பறிகொடுத்தார்.

பேயாடிக் குளம் எனும் இடத்தைச் சேர்ந்த அறுபது வயதுடைய அழகன் என்பவர் தனது மிளகாய்த் தோட்டத்தில்நாசம்விளைவிக்கவந்தபன்றி ஒன்றிற்குதாம்தயாரித்தகட்டுத்துப்பாக்கி ஒன்றின் மூலம் வெடி வைக்க முயன்றவர் துப்பாக்கி குழாய் வெடித்து தனது கண்ணைப் பறிகொடுக்க வேண்டிய நிலைக்குள்ளானார். (அ)

# விழிப்புக்குழு

(தீவுப்பகுதி)

தீவுப்பகுதியில் விழிப்புக் குழுக்கள் அமைக்கும் வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இப் பகுதிகளில் களவுகள், கொள்ளைகள்என்பனவற்றை தடுக்கவும், சந்தேக நபர்களைக் கண்காணிக்கவும் இவ் விழிப்புக்குழு உறுப்பினர்கள் செயல்படுவார்கள். வட்டார ரீதியில் அமையவிருக்கும் இக் குழுவில் அங்கம் வகிப்போர் சிற்றூரவையின் கீழ்] இயங்குவர்: (15)

# இணக்க மன்றுகள்

(நெடுங்கேணி)

நெடுங்கேணி பிரதேசத்தில் கிராமிய இணக்க மன்றுகள் அமைப்பு வேலைகள் பூர்த்தியடைந்துவிட்டன.

நெடுங்கேணி வடக்கு' நெடுங்கேணி தெற்கு, மருதோடை, ஒலுமடு பெரிய குளம்,அயிலடி, சின்னப் பூவரசங்குளம்,அடம்பன், கனகராயன் குளம்,ஆகிய இடங்களில் இணக்க மன்றுகள் அமைக்கப்பட்டன.

இவ் இடங்களில் அமைக்கப்பட்ட அமைப்புக் கூட்டங்களில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நெடுங்கேணிப் பிரதேசப் பொறுப்பாளர்திரு. பாலன் முல்லை மாவட்ட இணக்க மன்றுப் பொறுப்பாளர் திரு.வண்ணன், முல்லை மாவட்ட இணக்க மன்ற அமைப்பாளர் திரு. எஸ். வி முருகேசு ஆகியோர் கலந்து கொண்டனர். (30)

## விபரங்கள் சேகரிப்பு

ரெலோ,ஈ.பி.ஆர்.எல்.எப் ஈ.என்.டி.எல்.எப் இயக்கங்களினால் கொலை செய்யப்பட்டவர்களின் விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

இந்திய இராணுவத்தினர் இலங்கைக்கு வந்தபின் கிளிநொச்சி மாவட்டத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களின் பெயர்களை விடுதலைப் புலிகள்சேகரித்துவருகின்றனர்

# 6 ஆவது திருத்த நீக்கம்; லிபரல் கட்சி ஆதரவு

(கொழும்பு)

ஆறாவது சட்டத் திருத்தத்தை நீக்கும் வகையில் பயன் பொருத்தமான மாற்றுத் திட்டத்தை ஆக்கும்படி லிபரல் கட்சி அரசாங்கத்தைக் கேட்டுள்ளது. அரசியல் அமைப்பின் ஆறாவது திருத்த நீக்கத்துக்கு லிபரல் கட்சிஆதரவு தெரிவித்துள்ளது.

லிபரல் கட்சி வெளியிட்டுள்ள செய்தியறிக்கை வருமாறு:

ஸ்ரீலங்கா அரசியல் யாப்பில் ஓர் அங்கமாக இன்று இருக்கும் 6ஆவது திருத்த சட்டம் பிரிவினை வாதக் கோரிக்கையை வெளியிடுவது அல்லது அதற்கு ஆதரவுவழங்குவதைத் தடைசெய்கிறது. பிரிவினைக் கோரிக்கை தொடர்பான கருத்தைத் தெரிவிப்பது சட்ட விரோதமாகும் இக் குற்றத்தை இழைத்தவர்களின் குடியியல் உரிமையைப் பாதிக்கலாம். கடவுச் சீட்டையும், ஆதனங்களையும் பறிமுதல் செய்வதோடு தொழில் செய்யும் உரிமையையும் மறுக்கலாம். 6ஆவது சட்டத் திருத்தத்தின் பிரகாரம் பாராளுமன்றம், மாகாண சபைகள் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் ஒற்றையாட்சி முறையை ஆதரிப்பதாக சத்தியப்பிரமாணம் செய்யவேண்டும்.

அவ் வறிக்கை மேலும் தெரிவிப்பதாவது:

இனக்கலவரங்களில் பல தமிழர்கள் கொல்லப்பட்ட துயரத்திலிருந்து மீளாத நேரத்தில் 1983 ஆகஸ்டில் இச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

மனிதனின் அடிப்படைச் சுதந்திரத்தை லிபரல் கட்சி மதிப்பதாலும், ஒரு உள் நாட்டு யுத்தத்தை ஏற்படுத்திய இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண விரும்பி லிபரல் கட்சி 6 ஆவது சட்டத் திருத்தத்தை நீக்கும்படி அரசாங்கத்தைக் கோருகிறது.

# விலைப் பட்டியல்கள் வைக்கப்படல் வேண்டும்

(சித்தங்கேணி)

பாவனையாளர்களின் பார்வைக்கு ஏற்றவகையில் வியாபாரிகள் தமதுவியாபார நிலையங்களில் விலைப்பட்டியலை வைக்கவேண்டும். வியாபார நிலையங்களின் பெயர்ப் பலகைகள் யாவும் தமிழிலேயே எழுதப்படவேண்டும்.

இவ்வாறு வட்டுக்கோட்டை தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு. இ. ஐயர் சங்கானை வர்த்தகர்சங்கப்பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

வட்டு-இந்துக்கல்லூரிவள்ளியம்மை மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. ஐயர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

எம்மால் வரி விதிக்கப்பட்ட சிகரட், சாராயம், சோடா, பெற்றோல், டீசல், சீமெந்து பவுண் ஆகிய பொருட்களுக்கு அப்பொருட்களின் கட்டுப்பாட்டு விலையுடன் வரிவிதிக்கப்பட்ட தொகைக்கும் மேலாக அறவிடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (23)


## விக்னா ரியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.

(கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

91 DAY CLASSES (8.00 - 1.00)

அலகு 1 இலிருந்து ஆரம்பம் (12.6.90)

மு. குறிப்பு: (1) எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படும்.
(2) முழுப் பாடத் திட்டமும் முடித்துக் கொடுக்கப்படும்.
(3) முற்றிலும் பாடசாலை போன்றது.
(4) விடுதி வசதி செய்துகொடுக்கப்படும்.
(5) பரீட்சைகள் நடாத்தப்படும்.

(B 1012



## தேவை

அச்சுக் கோர்ப்பாளர்

பத்திரிகைத் துறையில் நன்கு தேர்ச்சி பெற்ற அனுபவத்துடன் கூடிய அச்சுக் கோர்ப்பாளர்கள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

நேரில் தொடர்பு கொள்ளவும்.

முகவரி:

தலைமைச் செயலகம்
விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி
தருமபுரம்,
கிளிநொச்சி.

(B-1145)

சிந்தனைக்கு

உலகில் உலவும் தீயசக்திகளில் மிகக் கொடியது, உண்மைக்கு விசுவாசமாய் இல்லாமை.

- கேம்ஸ் ஆந்தினி ஸ்ப்ரவுட்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 11-06-90

தொலைபேசி

ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208

த. பெ. எண் 05

# இன ஒற்றுமைக்கு எதிரிகள் யார்?

நாட்டில் சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கும்சமாதானத்தை நிலைநாட்டுவதற்கும் தாம் எடுத்துவரும் முயற்சிகளை சிலர் எதிர்க்கிறார்கள் என்று ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா பகிரங்கமாகவே கவலை தெரிவித்திருக்கிறார்.

மீண்டும் இனக்கலகத்தைக் கிளப்பி இரத்தக்களரி ஏற்படுத்துவதற்குச் சிலர் முயற்சி செய்து வருவதாகவும் திரு. பிரேமதாசா கூறியிருக்கிறார்.

நாற்பதாண்டுகளாக நாடிநரம்புகளில் ஏற்றப்பட்டுவந்த துவேஷத்தை ஓராண்டுக்குள் நீக்கிச் சுத்தமாக்கிவிட முடியுமா?

1950 ஆம் ஆண்டிலிருந்தே மலையகத்தில் தமிழ்த் தோட்டத் தொழிலாளரை அடிமைகளாக்கி அகற்ற வேண்டுமென்றும் கிழக்கு மாகாணத்தில் சிங்களவரைத் திட்டமிட்டுக் குடியேற்றிச் சிங்கள மயமாக்க வேண்டும் என்பதும் இரகசியமாகத் திட்டமிட்டுச் செயல்படுத்தப்பட்டது.

ஆட்சிபீடத்தில் மாற்றமேற்பட்டாலும் அதிகார வர்க்க மட்டத்திலும் உருவாக்கப்பட்ட சிங்களமயத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன்பின் 1956 ஆம் ஆண்டில் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து சிங்கள மக்கள் மத்தியில் உருவாக்கிவிடப்பட்ட ''அப்பே ஆண்டுவ'' (எங்கள் ஆட்சி) மனப்பான்மை தொடர்ந்து வளர்க்கப்பட்டே வந்திருக்கின்றது.

தமிழ் மக்களுக்கு உரிமை மறுக்கப்படுவதில் எந்தச் சிங்களக் கட்சி முன்னிற்கிறதோ அதுவே தேசியக்கட்சி என்ற பிரசாரம் தென்னிலங்கையில் ஏற்படுத்தப்பட்டது. தமிழ் மக்களின் கோரிக்கைகள், உரிமைப் பிரச்சினைகள் யாவும் வகுப்புவாதம் என்று முத்திரை குத்தப்பட்டது.

தமிழ் மக்களின் கோரிக்கையில் நியாயமிருக்கிறது என்று எந்தக் கட்சியைச் சேர்ந்த ஓர் அரசியல்வாதியாவது கருத்து வெளியிட்டால் அவர் துரோகியாகவும் வகுப்புவாதியாகவும் முத்திரை குத்தப்படுவதும் இங்கு வழக்கம்.

இனத்துவேஷத்தைக் கிளப்பியே ஆட்சிபீடத்துக்கு வருவதற்கு அரசியல்கட்சிகள்வழிகாட்ட அதிகாரபீடத்திலும் அரசாங்க சேவையிலும் இனத்துவேஷம் முக்கிய இடத்தைப் பிடித்தது.

இன்று ஜனாதிபதி பிரேமதாசா அரசு சிங்களத்துடன் தமிழ்மொழியையும் அரசகருமமொழியாக்கி ஆங்கிலத்தை இணைப்பு மொழியாக ஆக்கியிருக்கிறது.

மும்மொழிகளிலும் அரசாங்க இலாகாக்களில் அலுவல்கள்நடைபெறவேண்டுமென்று சுற்றுநிருபங்களும் அனுப்பப்பட்டிருக்கின்றன.

ஆனால் ஜனாதிபதியின் அலுவலகத்திலிருந்தும் மற்றும் திணைக்களங்கள் பலவற்றிலிருந்தும் ...

# 3 ஆம் உலகின் மூலவளங்கள் அழிந்துவருவதும் அவை வெளியேறிக் கொண்டிருப்பதும்

## மூன்றாம் உலகம் வளர்ச்சியா? நெருக்கடியா? என்னும் நூலில் இருந்து

மூன்றாம் உலகின் புதுப்பிக்கப்படக்கூடிய புதுப்பிக்கப் படமுடியாத மூலவளங்களில் பெரும் பகுதி தொழில்வளர்ச்சியடைந்த முதல் உலக நாடுகளால் பெருமளவில் சுரண்டப்பட்டு அந்த நாடுகளின் மக்களுக்கு வேண்டிய அடிப்படைப் பொருட்களையும் அதே போல ஆடம்பர, ஊதாரித்தனத்துக்கான பொருட்களையும் உற்பத்தி செய்வதற்கு அந்த நாடுகளுக்கு வெளியேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது.

### வெப்பக் காடுகள்

உலகின் வனப்பகுதியில் ஏறாத்தாழ சரி பாதி மூன்றாம் உலக நாடுகளில் உள்ள வெப்பக்காடுகளாகும். ஆனால், இந்த வெப்பக்காடுகள் கீழ்க்காணும் முறைகளில் ஓராண்டுக்கு 29000 சதுர மைல்கள் என்ற அளவிற்கு அச்சந்தரக்கூடிய வகையில் அழிக்கப்பட்டு வருகின்றன.

★ மாட்டிறைச்சிக்கும், இதைக் கொண்டு தயாரிக்கப்படும் ஹாம்பர்கர் போன்ற சிறுதீனி வகைகளுக்குமான சந்தை வேகமாக வளர்ச்சியடைந்துள்ளதால் அச்சந்தைத் தேவைகளை, நிறைவு செய்வதற்காகவளர்க்கப்படும் கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலங்களை உருவாக்க வெப்பக்காடுகளை அழித்தல்

★ மேசை, நாற்காலி, போன்றவற்றை உற்பத்தி செய்யவும் கட்டிடங்களுக்குள் பொருத்தப்படுகிற உயர்தர மரவேலைகளுக்காகவும் மரங்களை வெட்டுதல்.

★ தீப்பெட்டி, காகிதத் தொழில்களுக்காக மரங்களை வெட்டுதல்.

★ புகையிலையைச் சாகுபடி செய்யவும் அதைப் பதப்படுத்துவதற்குமாகமரங்களை வெட்டுதல்.

மேற்காணும் தொழில்கள் மிகப்பெருமளவில் பன்னாட்டு நிறுவனங்களால் கட்டுப்படுத்தப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

### உணவும் நிலமும்

உலகிற்கு அமெரிக்கா உணவளிக்கிறது என்பது ஒரு கட்டுக்கதை. விவசாய உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதியில் பெரும் பகுதி மூன்றாம்

## 1984 நவம்பர் 9,14 இல் பெனாங்கில் நடைபெற்ற மூன்றாம் உலக மாநாட்டின் அறிக்கைகளும் முடிவுகளும்

உலகிலேயே செய்யப்படுகிறது மூன்றாம் உலக நாடுகள் உயர்தர புரோட்டீன் உள்ள 350 லட்சம் டன் உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்து, அவற்றுக்குப் பதிலாக செல்வந்த நாடுகளிடமிருந்து புரோட்டீன் சத்துக் குறைவாக உள்ள 250 லட்சம் டன் தானியங்களை இறக்குமதி செய்து கொள்கினறன.

மேலும், உலகச் சந்தையில் வழங்கப்படும் தானியங்களில் மூன்றில் ஒரு பகுதி மேற்கு நாடுகளில் கால்நடைத் தீவனமாகப்பயன்படுத்தப்படுகிறது. ஒட்டு மொத்தமாகப் பார்த்தால், செல்வந்த நாடுகள் தம் கால்நடைகளுக்குத் தீவனமாகத் தரும் தானியங்களின் அளவு, ஏழை நாடுகளின் மனிதர்களுக்கும் கால் நடைகளுக்கும் கிடைக்கிற தானிய அளவைக் காட்டிலும் அதிகம்.

மூன்றாம் உலகில் ஒரு காலத்தில் உணவுப் பயிர்களைச் சாகுபடி செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட நிலங்களில் இன்று செல்வந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. பன்னாட்டு நிறுவனங்களின் வேளாண்மை வர்த்தகக் கார்ப்பரேஷன்கள், உள்நாட்டு மேட்டுக்குடியினர் ஆகியோரின் உடைமையிலோ அல்லது கட்டுப்பாட்டிலேயோ, பன்னாட்டு நிறுவனங்களின் லாபத்துக்காக ஏற்றுமதிப் பயிர்கள் சாகுபடி செய்யப்படும் ஏராளமான நிலங்கள் உள்ளன.

மிக வளமான விவசாய நிலங்களில் ஒரு பெரும்பகுதி புகையிலைச் சாகுபடிக்கான நிலங்களாக மாற்றப்பட்டுள்ளது. உலகின் மொத்தப் புகையிலைச் சாகுபடி நிலங்களில் 40% வளர்முக நாடுகளில் உள்ளன.

### மீன்வளம்

மூன்றாம் உலக நாடுகளின் மக்களின் புரதத் தேவையை நிறைவு செய்யும் பாரம்பரிய உணவாக மீன் இருந்து வந்தது. உலகம் முழுவதிலும் பிடிக்கப்படும் மீன்களின் அளவில் ஏறத்தாழ சரிபாதி வளர்முக நாடுகளிலிருந்து வந்த போதிலும் வளர்ச்சியடைந்த நாடுகள் நுகரும் மீன்களின் அளவு வளர்முக நாடுகள் நுகர்வதைவிட இரண்டரை மடங்கு அதிகம். மேலும், உலகில் பிடிக்கப்படும் மீன்களில் ஏறத்தாள 30 வீதம் முதல் உலகில் உள்ள கால்நடைகளுக்குத் தீவனமாக மாற்றப்படுகிறது. மூன்றாம் உலக மக்களுக்குப் பயன்படுவதற்குப் பதிலாக.

### கனிப்பொருட்கள்

உலகில் ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப்படும் ஒன்பது முக்கிய கனிப்பொருட்களில் மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகமாக முதல் உலக நாடுகளே நுகர்கின்றன. ஆனால் மொத்த உற்பத்தியில் அவற்றின் பங்களிப்பு மிக அற்பமானது. 1971 முதல் 1975 வரை, உலகில் மொத்தக் கனிப்பொருட்கள் உற்பத்தியில் வளர்முக நாடுகள் பயன்படுத்தியவை: அலுமினியம் உற்பத்தியில் 7வீதமும் தாமிர உற்பத்தியில் 9வீதமும் இரும்பு உற்பத்தியில் 12 வீதம்.

கனிப்பொருள் உற்பத்தித் துறையிலுள்ள பன்னாட்டு நிறுவனங்களும் உலக வங்கி போன்ற சர்வதேச நிறுவனங்களும் சில வளர்முக நாடுகளில் கனிவளத்தைத் தோண்டி எடுப்பதையும் அவற்றைச் சந்தைக்கு அனுப்புவதையும் தம் கட்டுப்பாட்டில் வைத்துள்ளன.

### வன விலங்குகள்

முதல் உலக மேட்டுக்குடியினரின் படாடோபத் தேவைகளுக்காக மூன்றாம் உலகில் உள்ள விலைமதிப்பற்ற வன விலங்குகள் அழிக்கப்பட்டு வருகின்றன. மருந்துஆராய்ச்சிகளுக்காக விலங்குகள் முதல் உலகத்தால் மனிதத்தன்மையற்ற முறையில் பயன்படுத்தப்படுகின்றன. மிகக் குரூரமான பரிசோதனைக்கு அவை ஆட்படுத்தப்படுகின்றன.

### மனித வளம்

தொழிற்திறமைபெற்றுள்ள தொழில் வல்லுனர்களும் தொழிலாளர்களும் முதல் உலகிற்கு குடிபெயர்வது மூன்றாம் உலக நாடுகளுக்கு ஏற்படும் பெரும் இழப்பாகும். இது மனித மூலதனத்தை வெளிநாடுகளுக்கு மாற்றுவதாகும் உங்க்டாட் புள்ளி விவரங்களின்படி மூன்றாம் உலகினது தொழில்வல்லுனர்கள் முதல் உலகிற்குக் குடியேறியதன் காரணமாக 1961 முதல் 1972 வரை முதல் உலகம் ஏறத்தாள ரூ. 61200 கோடி (51 பில்லியன் அமெரிக்க டாலர்) மதிப்புள்ள மனித மூலதனத்தைப் பெற்றுக் கொண்டது மனித வளங்கள் இவ்வாறு வெளியேறுவதற்கு முதன்மையானகாரணம்முதல் உலக சமுதாயம் மூன்றாம் உலக சமுதாயத்தை விடச் சிறந்தது என்ற தவறான எண்ணமாகும். முதல் உலகப் பண்பாடு செலுத்தும் மிகப் பெரும் செல்வாக்கின் காரணமாகவே இந்த எண்ணம் தோற்றுவிக்கப்படுகிறது.

### விதைகள்

உலகின் முக்கிய உணவுப் பயிர்களில் கிட்டத்தட்ட அனைத்துமே மூன்றாம் உலகில் உருவாகின்றவை தான். மூன்றாம்உலகிலிருந்து உயிர்ம மூலப்பொருட்கள் (germ plasm) தொழில்வளர்ச்சியடைந்த நாடுகளின் ஜீன் வங்கிகளுக்குஉறிஞ்சிக் கொள்ளப்படுகின்றன. முதல் உலகம் தன்னிடம் மிகப் பெருமளவிலான தாவரங்களின் 'ஜீன்' மூலகங்களைச் சேர்த்துவைத்துக் கொண்டுள்ளது. இதன். காரணமாக புதுவகைப் பயிர்களை உருவாக்குவதையும் விதைதரகங்களுக்கான காப்புரிமைகளையும் பன்னாட்டு நிறுவனங்கள் மூலம் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டுள்ளது.

புதுவகைப் பயிர்களைஉருவாக்குபவர்களின் ''உரிமைகள்'' புதுரகவிதைகளுக்கான ''காப்புரிமைகளு''க்கான பாதுகாப்பு ஆகியனவற்றை நடைமுறைப்படுத்துவதானது பன்னாட்டு நிறுவனங்களை (குறிப்பாக மருந்துற்பத்தி, இரசாயன பெட்ரோலியக் குழுமங்கள்) புதிதாக உருவாக்கப்பட்ட விதைரகங்களுக்கு உரிமைக் கட்டணங்களை வசூலிக்கவும் இத்தகைய விதைகளின் விற்பனைகளையும் விநியோகத்தையும் கட்டுப்படுத்தவும் அனுமதிக்கின்றன.

(தொடரும்)

# மீளக்குடியமர்வுக்கான நிவாரணம்

ஆசிரியர்,
ஈழநாதம்.

யாழ். மாவட்டத்தில் மீளக்குடியமர்வுக்கான நிவாரணம் ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மிகுதி முப்பதினாயிரம் குடும்பங்களுக்கு வழங்கப்படவில்லை.

கஷ்டப்பட்ட வசதி குறைந்த பலர் பெறவில்லை. இத் தெரிவு எப்படி நடைபெற்றது? இது நீதியானதா?

அல்லாமலும் யாழ் மாவட்டத்திலுள்ள குடும்பங்களின் தொகை எவ்வளவு என்பது அதிகாரிகளுக்குத் தெரியாவிட்டால் கி. சே. அ மூலம் தெரிந்து கொண்டு கொடுப்

# குடிமைத் தொழில் முற்றாக

(எங்கள் ஆட்சி) மனப்பான்மை தொடர்ந்து வளர்க்கப்பட்டே வந்திருக்கின்றது.

தமிழ் மக்களுக்கு உரிமை மறுக்கப்படுவதில் எந்தச் சிங்களக் கட்சி முன்னிற்கிறதோ அதுவே தேசியக்கட்சி என்ற பிரசாரம் தென்னிலங்கையில் ஏற்படுத்தப்பட்டது. தமிழ் மக்களின் கோரிக்கைகள், உரிமைப் பிரச்சினைகள் யாவும் வகுப்புவாதம் என்று முத்திரை குத்தப்பட்டது.

தமிழ் மக்களின் கோரிக்கையில் நியாயமிருக்கிறது என்று எந்தக் கட்சியைச் சேர்ந்த ஓர் அரசியல்வாதியாவது கருத்து வெளியிட்டால் அவர் துரோகியாகவும் வகுப்புவாதியாகவும் முத்திரை குத்தப்படுவதும் இங்கு வழக்கம்.

இனத்துவேஷத்தைக் கிளப்பியே ஆட்சிபீடத்துக்கு வருவதற்கு அரசியல்கட்சிகள்வழிகாட்ட அதிகாரபீடத்திலும் அரசாங்க சேவையிலும் இனத்துவேஷம் முக்கிய இடத்தைப் பிடித்தது.

இன்று ஜனாதிபதி பிரேமதாசா அரசு சிங்களத்துடன் தமிழ்மொழியையும் அரசகருமமொழியாக்கி ஆங்கிலத்தை இணைப்பு மொழியாக ஆக்கியிருக்கிறது.

மும்மொழிகளிலும் அரசாங்க இலாகாக்களில் அலுவல்கள்நடைபெறவேண்டுமென்று சுற்றுநிருபங்களும் அனுப்பப்பட்டிருக்கின்றன.

ஆனால் ஜனாதிபதியின் அலுவலகத்திலிருந்தும் மற்றும் திணைக்களங்கள் பலவற்றிலிருந்தும் தமிழ் மக்கள் எழுதும் கடிதங்களுக்குத் தனிச்சிங்களத்திலேயே பதில் அனுப்பப்படுகிறது.

''ஈழநாதம்'' பத்திரிகை தலைமைத் தபாலகத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப் பெற்றுள்ளது என்ற சான்றிதழ் ''ஈழநாதம்'' தமிழ்ப் பத்திரிகை அலுவலகத்துக்கு தனிச் சிங்களத்திலேயே அனுப்பப்பட்டது என்றால் அரசாங்க சேவையிலுள்ளோரின் மனப்பான்மை என்னவென்பது தெளிவு.

கிழக்கு வடக்கு மாகாணங்களிலுள்ள மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள் மாநாடு கடந்த எட்டாந்தேதி மட்டக்களப்பில் நடைபெற்றது. மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. ஆர். யோகநாதன் இம்மாநாட்டைக் கூட்டியிருந்தார்.

இம்மாநாட்டிற்குஇரண்டுமாவட்டங்களின் அரசஅதிபர்கள் வரவில்லை. முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் தாம் கலந்துகொள்ளமுடியாத காரணத்தைத் தெரிவித்து தமது சார்பில் ஒரு பிரதிநிதியை அனுப்பியிருந்தார்.

திருக்கோணமலை மாவட்ட அரசாங்க அதிபரும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருமே இம்மாநாட்டில் கலந்துகொள்ளாத இருமாவட்ட அதிபர்களாவார்கள்.

இவர்களிருவரும் இதற்கான காரணம் தெரிவிக்கவில்லை; பிரதிநிதிகளையும் அனுப்பவில்லை. இருவரும் சிங்களவர்கள்!

ஜனாதிபதி பிரேமதாசாவின் இன ஒற்றுமை முயற்சியை எதிர்ப்பவர்கள் அரசியல்வாதிகள், சிங்களப் பேரினவாதப் பத்திரிகையாளர்கள் மட்டுமல்ல; அரசாங்க சேவையிலுள்ள அதிகாரிகள் என்பதையும் பிரேமதாசா உணர்ந்து கொள்வது நல்லது.

குஷ்டரோக பரிசோதனை

# நடமாடும் பரிசோதகரால் மேற்கொள்ளப்படும்

(பொத்துவில்)

பொத்துவில் அரசாங்க வைத்தியசாலையில் குஷ்டரோக தோல்வியாதி சம்பந்தமான பரிசோதனை மாந்தீவு குஷ்டரோக வைத்தியசாலையின் நடமாடும் வைத்திய சேவைப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தூர இடங்களிலுள்ள கிராமியப்பகுதி நோயாளிகளின் நலன்கருதி ஆரம்பிக்கப்பட்டுள்ள நலன் பேணும் இச் சேவை பிரதி மாதந்தோறும் நடைபெற்று வருகிறது.

இப் பரிசோதனைக்கென மாந்தீவுகுஷ்டரோகவைத்திய சாலையிலிருந்து ஒரு பெண் தாதியும், பொதுச் சுகாதார பரிசோதகரும் குறித்த தினத்தில் பொத்துவில் வைத்திய சாலையில் சமுகமளித்து பரிசோதனையை மேற்கொள்கின்றனர். (54)

செய்வதற்காகவளர்க்கப்படும் கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலங்களை உருவாக்க வெப்பக்காடுகளை அழித்தல்

★ மேசை, நாற்காலி, போன்றவற்றை உற்பத்தி செய்யவும் கட்டிடங்களுக்குள் பொருத்தப்படுகிற உயர்தர மரவேலைகளுக்காகவும் மரங்களை வெட்டுதல்.

நாடுகளில் கால்நடைத் தீவனமாகப்பயன்படுத்தப்படுகிறது. ஒட்டு மொத்தமாகப் பார்த்தால், செல்வந்த நாடுகள் தம் கால்நடைகளுக்குத் தீவனமாகத் தரும் தானியங்களின் அளவு, ஏழை நாடுகளின் மனிதர்களுக்கும் கால் நடைகளுக்கும் கிடைக்கிற தானிய அளவைக் காட்டிலும் அதிகம். மேலும், உலகில் பிடிக்கப்படும் மீன்களில் ஏறத்தாள 30 வீதம் முதல் உலகில் உள்ள கால்நடைகளுக்குத் தீவனமாக மாற்றப்படுகிறது. மூன்றாம் உலக மக்களுக்குப் பயன்படுவதற்குப் பதிலாக.

### கனிப் பொருட்கள்

உலகில் ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப்படும் ஒன்பது முக்கிய கனிப்பொருட்களில் மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகமாக முதல் உலக நாடுகளே நுகர்கின்றன. ஆனால் மொத்த உற்பத்தியில் அவற்றின் பங்களிப்பு மிக அற்பமானது. 1971 முதல் 1975 வரை, உலகில் மொத்தக் கனிப்பொருட்கள் உற்பத்தி ... தொழில் வல்லுனர்களும் தொழிலாளர்களும் முதல் உலகிற்கு குடிபெயர்வது மூன்றாம் உலக நாடுகளுக்கு ஏற்படும் பெரும் இழப்பாகும். இது மனித மூலதனத்தை வெளிநாடுகளுக்கு மாற்றுவதாகும் உங்க்டாட் புள்ளி விவரங்களின்படி மூன்றாம் உலகினது தொழில்வல்லுனர்கள் முதல் உலகிற்குக் குடியேறிய தன் காரணமாக 1961 முதல் 1972 வரை முதல் உலகம் ஏறத்தாள ரூ. 61200 கோடி (51 பில்லியன் அமெரிக்க டாலர்) மதிப்புள்ள மனித மூலதனத்தைப் பெற்றுக் கொண்டது மனித வளங்கள் இவ்வாறு வெளியேறுவதற்கு முதன்மையானகாரணம்முதல் ... டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டுள்ளது.

புதுவகைப் பயிர்களைஉருவாக்குபவர்களின் ''உரிமைகள்'' புதுரகவிதைகளுக்கான ''காப்புரிமைகளு''க்கான பாதுகாப்பு ஆகியனவற்றை நடைமுறைப்படுத்துவதானது பன்னாட்டு நிறுவனங்களை (குறிப்பாக மருந்துற்பத்தி, இரசாயன பெட்ரோலியக் குழுமங்கள்) புதிதாக உருவாக்கப்பட்ட விதைரகங்களுக்கு உரிமைக் கட்டணங்களை வசூலிக்கவும் இத்தகைய விதைகளின் விற்பனைகளையும் விநியோகத்தையும் கட்டுப்படுத்தவும் அனுமதிக்கின்றன.

(தொடரும்)

# மீளக்குடியமர்வுக்கான நிவாரணம்

ஆசிரியர்,
ஈழநாதம்.

யாழ். மாவட்டத்தில் மீளக் குடியமர்வுச்கான நிவாரணம் ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மிகுதி முப்பதினாயிரம் குடும்பங்களுக்கு வழங்கப்படவில்லை.

## மக்கள் மடல்

நாங்கள் எல்லோரும் எங்கள் பகுதி கி. சே. அ, மூலம் ஒருமித்தே விண்ணப்பித்தோம். அப்படியிருக்கப் பலருக்குக் கொடுபட்டிருக்கிறது. எம்போன்ற சிலர் விலக்கப்பட்டனர். என்ன காரணத்தால் நாம் விலக்கப்பட்டோம் என்பதை அதிகாரிகள் கூறுவார்களா? விண்ணப்பம் பிந்திக்கிடைத்தது என்று சொல்லுவது நியாயமில்லை. இடம் விட்டுப் பெயராதவர்களும் வசதியுள்ளவர்களுமான பலர் நிவாரணம் பெற்றிருக்கிறார்கள். இடம் பெயர்ந்து கஷ்டப்பட்ட வசதி குறைந்த பலர் பெறவில்லை. இத்தெரிவு எப்படி நடைபெற்றது? இது நீதியானதா?

அல்லாமலும் யாழ் மாவட்டத்திலுள்ள குடும்பங்களின் தொகை எவ்வளவு என்பது அதிகாரிகளுக்குத் தெரியாவிட்டால் கி. சே. அ மூலம் தெரிந்து கொண்டு கொடுப்பனவு பற்றித்திட்டம் போட்டுக் கிடைத்தபணத்தை எல்லாக்குடும்பங்களுக்கும் கிடைக்கக்கூடியதாகப் பங்கிட்டுக் கொடுத்திருக்கலாமே.

கொடுப்பனவு தொடங்கிக் கிட்டத்தட்ட ஒன்றரை வருடங்களுக்கு மேலாகி விட்டது. கொடுத்தவர்களுக்கே திரும்பவும் வேறு முறைகளில் கொடுத்துக் கொண்டிருக்கிறார்களே தவிர ஒன்றுமே கொடுக்காதவர்களைப் பற்றிச் சிறிதும் சிந்திக்கவில்லையே. அவர்களை இம்மாவட்டத்தில் இரண்டாந்தரப் பிரசைகளாகவா கணிக்கிறார்கள்?

கந்தையா
நாயன்மார்கட்டு,
அரியாலை மத்தி

# நடுதெருவில் நிற்கவைக்கும் அவலம் நீங்குமா?

ஆசிரியர்,
ஈழநாதம்.

யாழ். நகருக்கு கல்விகற்பதற்காக, வைத்தியத்திற்காக வேலைக்காக மற்றும்பல அத்தியாவசிய தேவைகளிற்காக செல்லும் பொன்னாலை, மூளாய், தொல்புரம், சுழிபுரம், சித்தங்கேணி, வட்டுக்கோட்டையை சேர்ந்த பல பஸ் பிரயாணிகள் காலை 6-30—8-30வரை பஸ்சிற்காக படும் அல்லல் சொல்லில் அடங்காது. குறிப்பாக இ.போ.ச. பஸ்ஸையே நம்பியிருக்கும் சீசன் டிக்கட் எடுத்த பிரயாணிகள் குறிப்பிட்ட நேரத்திற்குத் தம் அலுவல்களிற்கு செல்ல முடியாதுள்ளார்கள். இதனால் அலுவலகங்கள், கடைகளில் வேலைபார்ப்போரும், மாணவருமே பெரிதும் சிக்கல்படுகின்றனர். இவர்களே கட்டாயம் குறிப்பிட்ட நேரத்திற்கு காலையில் செல்ல வேண்டியவர்கள். இதனால் பிந்தி செல்வோர், அலுவலகங்கள் குறுகியலீவு 1/2 நேரலீவு எடுக்கவேண்டியவர்களாகிறார்கள். மாணவர்கள் தண்டனைக்குள்ளாகிறார்கள். நீண்ட காலமாக ஒழுங்காக நடைபெற்ற இச் சேவை பஸ்கள் விசேடசேவைகளை ஏற்று செல்வதாலேயே இ. போ. ச. வையே நம்பியுள்ள எம்போன்ற பல பருவ கால சீட்டு வைத்துள்ள வாடிக்கையாளர்களை இன்னலுக்குள்ளாக்குவதாக உணர்கிறோம். இ. போ. ச வையே நம்பியுள்ள எம்போன்ற பல பருவகாலச் சீட்டு வைத்துள்ள வாடிக்கையாளர்களை இன்னலுக்குள் ஆளாக்குவதாக உணர்கிறோம். இ. போ ச. என்றால் ''இதில் போவது சங்கடம்'' என்று எண்ணவைக்காமல், பல நூற்றுக்கணக்கான பருவகால சீட்டு வாடிக்கையாளர்களையும் இழக்காமல் உரிய நடவடிக்கைகளை எடுத்து இச்சேவை சீராக்குமாறு உரியவர்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

மூளாய் றெக்ஸ்

# குடிமைத் தொழில் முற்றாக தீவுப்பகுதியில் நீக்கம்

(புங்குடுதீவு)

தீவுப்பகுதி சிகை அலங்கரிப்பாளர் சங்கம் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் தமது சமூக நலன் கருதி தீவுப்பகுதி அனைத்திலும் குடிமைத் தொழில்முறையை முற்றாக நீக்கியுள்ளதாக சுவரொட்டி மூலம் அறிவித்திருக்கின்றது.

தமது சமூக மக்கள் பல வருட காலமாக தலைமுறை தலைமுறையாக தமது தொழில்களைவீடுகள்தோறும் சென்று சேவை செய்து வந்ததுடன் பல சமய கிரியைகளிலும் தமது பங்கினை ஆற்றி வந்துள்ளனர்.

இச் சேவையினைச் செய்து வரும் தமது மக்களையும், தொழில்களையும் இழிவாக கருதுவதாலும் இச்சமூக மக்கள் பின் தங்கிய நிலையில் செல்வதை தடுக்கும் நோக்குடனும், தமது தொழில்களைச் சீர்திருத்தி சிறந்த முறையில் சேவை செய்யப் படவேண்டும் என்பதைக் கருத்திற் கொண்டும் மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டதாகதெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இச்சமூக மக்களை வற்புறுத்தக்கூடாது என்பதையும் கட்டாயப் படுத்தி உறுப்பினர்களுக்கு ஏதேனும் தொல்லைகொடுப்பார்களேயானால் தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்க இச் சங்கம் தயங்காதுஎனவும் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (22)

## மின்சாரம் இல்லை என மக்கள் கவலை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பெருங்காடு கந்தசுவாமி கோவில் முன்றலில் இருந்து வடக்கு நோக்கிச் செல்லும் சேசிகன் வீதியின் முடிவில் தொடரும் தர்மக் குண்டு வீதிக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படாததையிட்டு இப்பகுதிமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சுமார் முக்கால் மைல் நீளமான இவ்வீதியின்அரைவாசிப் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதால் மிகுதிப் பகுதியில் வாழும் மக்கள் தாங்கள் மின்சாரம் பெறமுடியவில்லை என்றும் இதுபற்றி பலதடவைகள் மேலிடத்திற்கு தெரிவிக்கப்பட்டும் நடவடிக்கையேதும் எடுக்கப்படாததையிட்டும் மேற்படி மக்கள் விசனப்படுகிறார்கள். (22)

# பிரிட்டிஷ் பிரதமருடன் கொர்பசேவ் பேச்சு

(மாஸ்கோ)

மேற்கு ஜேர்மனியும் கிழக்கு ஜேர்மனியும் ஐக்கியப்படுவது குறித்து பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மாகிரட் தட்சரும், சோவியத் ஜனாதிபதி கொர்பசேவும் கருத்து வேறுபாடுகளைக் கொண்டுள்ளனர்.

சோவியத் ரஷ்யாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற் கொண்டிருந்த போது, இருதலைவர்களும் பலதரப்பட்ட விடயங்கள் குறித்து பேச்சு நடாத்தினார்கள்.

அண்மையில் நடைபெற்ற அமெரிக்க சோவியத் உச்சி மாநாடு குறித்து சோவியத் ஜனாதிபதி விபரமாக கூறினார்.

பிரிட்டிஷ் இளவரசி ஆன் இதற்கு முன்னர் இங்கு வந்து சென்றதும் குறிப்பிடத்தக்கது.

## சனசமூக நிலைய 40 ஆவது ஆண்டு விழா

(கொழும்புத்துறை)

கட்டப்பிராய் கலைமணி சனசமூக நிலையத்தின் 40 ஆவது ஆண்டு விழா எதிர் வரும் ஆனிமாதப் பிற்பகுதியில் வெகு சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றது.

இவ் விழாவையொட்டி யாழ் மாவட்ட ரீதியில் ஆண்களுக்கான 25 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி, பெண்களுக்கான 10 மைல் மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி, 6 பேர் கொண்ட கரப்பந்தாட்டப் போட்டி (ஓவர்கேம்) 16 வயதுக்கு உட்பட்ட 6 பேர் கொண்ட கிரிக்கெட் போட்டி என்பனவும் மற்றும் உள்ளூர் ரீதியிலும் 22 வயதுக்குட்பட்டவர்களுக்கான 15 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி 5மைல் மரதன் ஓட்டம் சிறுவர் சிறுமிகளுக்கான விளையாட்டுக்கள் எனப் பல நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

இப்போட்டிகள் நடைபெறும் திகதிகள் விரைவில் அறிவிக்கப்படும் எனவும் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் சனசமூக நிலையங்களைச் சேர்ந்தவீரர்களைத் தங்கள் விண்ணப்பங்களைத் திரு. ஸ்ரீ. சண்முகநாதன், செயலாளர், கலைமணி விளையாட்டுக் கழகம் கட்டப்பிராய் ஒழுங்கை கோப்பாய் தெற்கு கோப்பாய் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்குபடி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (24)


Registered as a News Paper at the G. P. O.

ஈழநாதம்

நகல் மசோதா

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடனம் செய்ந ஈழப் பிரகடனத்திற்கும் எதுவித தொடர்பும் இல்லையென்றும், இதனால் தமது அங்கத்துவம் பறிக்கப்படுவது அரசியல் சட்டத்திற்கு முரணானது என்றும் குறிப்பிடுவதாகத் தெரிய வருகின்றது.




சிரித்திரன் சிவஞானசுந்தரம்

# “இராணுவ அடக்கு முறைகளின் போதும் மக்களை சிரிக்க வைத்தவர்”

- பாலசிங்கம்

(நெல்லியடி)

எமது வீரம் செறிந்த போராட்டம் இலங்கை இராணுவஅடக்கு முறையின் கீழும் இந்திய இராணுவ அடக்கு முறையின் கீழும் தீயசக்திகள் எம் மக்கள் மீது அடாவடித்தனங்களை பிரயோகித்த போதும் சிரித்திரன் மாத இதழை மிகவும் கஷ்டங்களின் மத்தியிலும் வெளியிட்டு மக்களுக்குநகைச்சுவைஉணர்வூட்டி அவர்களை, சந்தோசப்படுத்தி சிரிக்கவைத்தவர் எமது சிரித்திரன் ஆசிரியர் திரு. சி. சிவஞான சுந்தரமவர்கள் என நெல்லியடி இருதயக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற நூல் அறிமுக விழாவின்போது கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தெரிவித்தார்.

மேலும் திரு. பாலசிங்கம் ஆசிரியர் சுந்தரரைப் பற்றி கூறுகையில் சமூகத்தின்ஜதார்தகோலத்தை எடுத்துக் காட்டும் வழிமுறையாக காட்டூனைப் பயன்படுத்திய முதல் ஈழத்தமிழர் சிரித்திரன் சுந்தராவார்என்றும்குறிப்பிட்டார்

இவரைத்தொடர்ந்து பேசிய கவிஞர்காசிஆனந்தன்குறிப்பிடுகையில் மனித இனத்துக்கே உரித்தான சிறப்புப்பண்பான சிரிப்பை கருவியாக்கி கொண்டு அதன் மூலம் தமிழினத்தை விழிப்புணர்வு பெற செய்தவர் எமது சிரித்திரன் ஆசிரியர் சிவஞான சுந்தரம் அவர்கள் என்று குறிப்பிட்டதுடன் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மிக விரும்பிப் படிக்கும் மாத இதழ் சிரித்திரன் என்று குறிப்பிட்டார்.

மேலும் இக் கூட்டத்தில் விடுதலைப்புலிகள் தலைமைக் குழு உறுப்பினர் செங்கதிர் உட்பட பல எழுத்தாளர்களும் பலநோக்கு கூட்டுறவு சங்கதலைவர்களும் உரையாற்றினார்கள் மேலும் இந் நூல் அறிமுக விழா கட்டைவேலி-நெல்லியடி பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கதாகும். (அ)

புகையிரத

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு செல்லும் பயணிகள் பெரும் சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர்.

இதனால் காங்கேசன்துறைப் பயணிகள் சுன்னாகம் புகையிரத நிலையம் வரை வந்து தமது கொழும்புக்கான டிக்கெட்டுக்களைப் பெற்றுக் கொண்டு பின் புகையிரதத்தில் பயணம் செய்ய வேண்டி உள்ளது.

இலங்கையிலேயே நீண்டதூர புகையிரத சேவையில் மிகக் கூடிய கட்டணத்தைப் பெற்றுக் கொள்ளும் புகையிரதக் கட்டணம் இதுவாக இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (அ)

உயர் நீதிமன்றத்தில்

( 1ஆம்பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் சமுகமளிக்காது உறுப்பினர் தாமாகவே விலகினால் மாகாணசபையின்நிறை

# யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு புதிய பொறியியல் ஆய்வுகூடம்

- சமரசிங்கா

(யாழ்ப்பாணம்)

ஆசிய அபிவிருத்தி வங்கியால் யாழ் தொழில்நுட்பக் கல்லூரிக்கு ஒதுக்கப்பட்ட எட்டுக்கோடி ரூபா நிதியைப் பயன்படுத்தி புதிதாக கட்டதிட்டமிடப்பட்டிருந்த இரண்டு மாடிக் கட்டிடம் இன்னும் ஒரு மாதகாலத்திற்குள் அமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் தொடங்கப்பட உள்ளது என யாழ் தொழில்நுட்பக் கல்லூரிக்கு விஜயம் செய்துள்ள தொழில்நுட்பக் கல்லூரிப் பணிப்பாளர் டபிள்யு சமரசிங்க மாணவர்களுடன் நடாத்திய கலந்துரையாடலில் உறுதிமொழி வழங்கியுள்ளார்.

மேலும் திரு. சமரசிங்காவுடன் நடந்த கலந்துரையாடலின்போது தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் சில வேண்டுகோள்களை விடுத்தனர். ஒவ்வொரு வடமாகாண மாவட்டத்திலும் ஒவ்வொரு தொழில்நுட்பக் கல்லூரி மிக விரைவில் அமைக்கப்பட

அமைச்சு மட்டத்தில் அமுலில் இருப்பதாகவும் இது கூடிய விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் வும் அவர் கூறினார்.

இத்தோடு புதிய பாடங்களை ஆரம்பித்தல் பரீட்சைகளை வருட முடிவுகளில் உடன் வைத்தல் வினாத்தாள்களில் இணைப்பு மொழியினையும் சேர்த்தல் தற்போதுள்ள கட்டிடங்களைத் திருத்தியமைப்பதற்கான நிதியை உடன் பெற்றுக் கொள்ளல் சம்பந்தமாகவும் பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இந்தக் கோரிக்கைகள் அனைத்தையும் தாம் ஏற்றுக் கொள்வதாக இந்த கலந்துரையாடலில் கூறினார்.

இக் கலந்துரையாடலைத் தொடர்ந்து நேற்று நடைபெற்ற “நுண்தொழில் இளைஞன்” சஞ்சிகை வெளியீட்டு விழாவின்போது பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்

ஏற்ற தராதரத்திற்கு உயர்த்தப் போவதாகவும் கூறினார்.

இவருடன் இவ் விழாவிற்கு தொழிற்கல்வியின் மேலதிக பணிப்பாளர் ஏ. ரி. தர்மபிரியாவும் வந்திருந்தார். சிறப்பு விருந்தினராக மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. சண்முகநாதன் பங்கு பற்றி தமது உரையின்போது இனி வரும் நாட்களில் வட பகுதிக்கு விஜயம் செய்யும் தூதுவராலய அதிகாரிகளை யாழ் தொழில்நுட்பக் கல்லூரிக்கு அழைத்து வந்து காட்டுவதாக உறுதிமொழி கூறினார். இதற்கு முன்னோடியாக எதிர்வரும் 17 ஆம் 18 ஆம் திகதியில் யாழ் மாவட்டத்திற்கு விஜயம் செய்ய உள்ள நோராட்ஸ்தாபன உயரதிகாரிகள் இங்கு அழைத்து வரப்படுப்படுவார்கள் எனவும் கூறினார்.

தமிழரின்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது.

அதனை பழைய அரசியல் தலைமை அகிம்சைமுறையாக எதிர்த்து வந்தது. இவ்வாறாக 1948முதல் ‘அப்போராட்டம் நடைபெற்று பின் இராணுவ ஒடுக்குமுறை ஏற்பட்டது. இதனையடுத்தே ஆயுதப்போராட்ட வரலாறு தோன்றியது.

பதினைந்து ஆண்டு காலத்துக்கு மேலாக எமது இனத்தின் விடுதலைப் போராட்டம் முன்னெடுத்து வந்துள்ளன. புலிகள் தோன்றிய வரலாறு. புலிகள்முன்னெடுத்துச்சென்ற அரசியல் போராட்ட வரலாறுபோன்ற யதார்த்தபூர்வ வரலாற்றை ஆசிரியர்களான நீங்கள் கண்டுள்ளீர்கள் இதனை மாணவர்களுக்கு எடுத்து விளக்கவேண்டும்.

மாணவன் வீதியில் புத்தகத்துடன் செல்லுகிறான். அதே வீதியில் போராளி ஆயுதத்துடன் செல்கிறான். நாம் போராளிகளை உருவாக்குகின்றோம். ஆசிரியர்கள் மாணவர்களை உருவாக்குகின்றனர்.

யாழ் குடாநாட்டின் பாதுகாப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ள போராளிகள் மன்னார், திருக்கோணமலை, மட்டக்களப்பு வன்னி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணப்பகுதி போராளிகள் இங்கில்லை ஏன்? யாழ்ப்பா

பாக்கு நீரிணையில் மத்திய பொலிஸ்படை

# தமிழ் நாட்டுக் கோரிக்கை மத்திய அரசு மறுப்பு

(புதுடில்லி)

தமிழ் நாட்டுக் கடல் ஓரப் பகுதியில் ஈழப்போராளிகளின் ஊடுருவலைத் தடுக்க தமிழ் நாட்டுக்கடல் ஓரப்பகுதியில் மத்திய பொலிஸ்படை அல்லது மத்திய துணை நிலை இராணுவத்தின்கண்காணிப்பு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தமிழ் நாடு அரசின் கோரிக்கையை மத்திய அரசு ஏற்கவில்லை.

தமிழ் நாட்டுக் கடல் ஓரப் பகுதியில் அன்னிய தீவிரவாதிகளின் நடமாட்டம் எதுவும் இருக்கவில்லை என மத்திய அரசு கருதுவதே இதற்குக் காரணம் தமிழ்ப் போராளிகளின் நடமாட்டம் குறித்து பத்திரிகைகளில் வெளியான செய்தி பற்றி மத்திய அரசு விவாதம் நடத்தி அந்தச் செய்திகளில் கூறப்பட்டபடி தமிழகக் கடல் பகுதியில் பயப்படும் படியான அபாயகரமான நிலைமை எதுவும் கிடையாது என்பதனால் மத்திய பொலிஸ்படைகள் அவசியம் இல்லை என அரச அதிகாரிகள் கூறினார்கள்.

இந்திய அமைதி காப்புப் படையினர் திருப்பி அனுப்பப்பட்ட பின்னர் தமிழ் நாட்டு பாதுகாப்பு பற்றி மத்திய அரசு பரிசீலனை செய்து வருவதாகவும் ஆனால் பஞ்சாப் காஸ்மீர் போல் தமிழ்நாட்டில் பிரச்சினைகள்இல்லாதது அதிர்ஷ்டவசமானது என்றும் கூறினார்.

தமிழக அரசின் கோரிக்கை ஏற்கப்படாததற்கும் ஜம்மு, காஸ்மீர், பஞ்சாப், அசாம் ஆகிய மானிலங்களில் உள்ள பாதுகாப்பு நிலையும் ஒரு காரணமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

# வழி தவறிய சகோதரர்களை நெறிப் படுத்தியுள்ளோம்

கைதிகள் விடுதலையில் பகீன்

கொழும்பு செல்லும் பயணிகள் பெரும் சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர்.

இதனால் காங்கேசன்துறைப் பயணிகள் சுன்னாகம் புகையிரத நிலையம் வரை வந்து தமது கொழும்புக்கான டிக்கெட்டுக்களைப் பெற்றுக் கொண்டு பின் புகையிரதத்தில் பயணம் செய்ய வேண்டி உள்ளது.

இலங்கையிலேயே நீண்டதூர புகையிரத சேவையில் மிகக் கூடிய கட்டணத்தைப் பெற்றுக் கொள்ளும் புகையிரதக் கட்டணம் இதுவாக இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (அ)

## உயர் நீதிமன்றத்தில்

(1ஆம்பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் சமுகமளிக்காது உறுப்பினர் தாமாகவே விலகினால் மாகாணசபையின்நிறைவெண் (கோரம்) குறையும்பட்சத்தில்மாகாணசபை கலைந்ததாகக்கருதப்படும் என்றதிருத்தமும் கொண்டுவரப்படவுள்ளது.

கல்லூரிக்கு ஒதுக்கப்பட்ட எட்டுக்கோடி ரூபா நிதியைப் பயன்படுத்தி புதிதாக கட்ட திட்டமிடப்பட்டிருந்த இரண்டு மாடிக் கட்டிடம் இன்னும் ஒரு மாதகாலத்திற்குள் அமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் தொடங்கப்பட உள்ளது என யாழ் தொழில்நுட்பக் கல்லூரிக்கு விஜயம் செய்துள்ள தொழில்நுட்பக் கல்லூரிப் பணிப்பாளர் டபிள்யு சமரசிங்க மாணவர்களுடன் நடாத்திய கலந்துரையாடலில் உறுதிமொழி வழங்கியுள்ளார்.

மேலும் திரு. சமரசிங்காவுடன் நடந்த கலந்துரையாடலின்போது தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் சில வேண்டுகோள்களை விடுத்தனர். ஒவ்வொரு வடமாகாண மாவட்டத்திலும் ஒவ்வொரு தொழில்நுட்பக் கல்லூரி மிக விரைவில் அமைக்கப்பட வேண்டும் என மாணவர்கள் கேட்டதற்கு தமிழ் மாவட்டங்களில் பு[illegible] தொழில்நுட்பக் கல்லூ[illegible] ஆரம்பிப்பது பற்றிய தீர்மானம்

# அச்சுவேலிகைத்தொழிற்பேட்டை புனரமைக்க நிதிக் கோரிக்கை

(மட்டக்களப்பு)

வட-கிழக்கு மாகாணசபையின் கைத்தொழில் சக்திவள அமைச்சு அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையை புனரமைப்புச் செய்வதற்காக புனர்வாழ்வு அமைச்சிலிருந்து நிதியுதவி கோரியுள்ளதாக வட-கிழக்கு மாகாணத் தொழில் சக்திவள அமைச்சு செயலாளர் திரு. கே. குணரெத்தினம் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் செய்தியாளர்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது: சாவகச்சேரியில் தும்பு பதனிடு நிலையம், நீர்வேலியில் வாழைநார் மூலம் பொருள் உற்பத்தி நிலையம், மன்னாரில் தச்சு பயிற்சி நிலையம் என்பன அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும்.

அதிகாரப் பரவலாக்கம் கீழ் கையளிக்கப்பட்ட திணைக்களங்களுக்கு சம்பளம் மட்டும் தான் மத்திய அரசு வழங்குகிறது. முதலீட்டுச் செலவு, ஊக்குவிப்பு நிதி என்பன இதுவரை வழங்கப்படவில்லை என்று கூறினார். (37)

# இலங்கையின் ரயில்வேயை நவீனமயப்படுத்தத் திட்டம்

(கொழும்பு)

இலங்கையில்ரயில்சேவையை நவீன மயப்படுத்தப் போக்குவரத்துச் சபை நடவடிக்கைகளை எடுக்கும்என்று போக்குவரத்துஅமைச்சர்அறிவித்துள்ளார்.

ரயில்வேப் பகுதி பயன்படுத்திவரும் சாதனங்கள் மிகப் பழைமையானவை என்றும் அவற்றை மாற்றி நவீன மயப்படுத்தப்போவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மரத்தினால் செய்யப்பட்ட சிலிப்பர் கட்டைகளுக்குப் பதிலாகக் கொங்கிறிட் சிலிப்பர் கட்டைகளைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இவற்றை உள்ளூரில் தயாரிப்பதற்கான தொழிற்சாலையும் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் ரயில் சேவைகளும் மின் மயப்படுத்தப்படும். 840 கோடி ரூபா இத்திட்டத்திற்கு செலவாகும். எரிபொருளுக்கென 32 கோடி 50 இலட்சம் ரூபா செலவிடுகிறது. ஆகவேதான் இத்திட்டத்தினை உருவாக்கவுள்ளோம்என்று போக்குவரத்து அமைச்சர் தெரிவித்தார்.

இத்திட்டத்தினை உருவாக்குவதன் மூலம் 14 கோடி 70 இலட்சம் ரூபாவை மீதப்படுத்தக் கூடியதாக இருக்கும் என்றார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 - ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11 ஆம் தேதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

முறைப்படுத்தப்படும் எனவும் அவர் கூறினார்.

இத்தோடு புதிய பாடங்களை ஆரம்பித்தல் பரீட்சைகளை வருட முடிவுகளில் உடன் வைத்தல் வினாத்தாள்களில் இணைப்பு மொழியினையும் சேர்த்தல் தற்போதுள்ள கட்டிடங்களைத் திருத்தியமைப்பதற்கான நிதியை உடன் பெற்றுக் கொள்ளல் சம்பந்தமாகவும் பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இந்தக் கோரிக்கைகள் அனைத்தையும் தாம் ஏற்றுக் கொள்வதாக இந்த கலந்துரையாடலில் கூறினார்.

இக் கலந்துரையாடலைத் தொடர்ந்து நேற்று நடைபெற்ற "நுண்தொழில் இளைஞன்" சஞ்சிகை வெளியீட்டு விழாவின்போது பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் பொழுது திரு. சமரசிங்கா யாழ்ப்பாண தொழில்நுட்பக் கல்லூரிக்கு விரைவில் ஒரு பொறியியல் ஆய்வுகூடம் அமைத்துத் தரவிருப்பதாகவும் இதன் மூலம் தொழில் நுட்பக் கல்வியை பிரித்தானிய நாட்டில் கற்பிக்கப்படும் பயிற்சி நெறிகளுக்கு

## ஸ்ரீ. ல. சு. கட்சி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தவுள்ளனர்.

இப் பேச்சுவார்த்தையின் போது ஆறாவது சட்ட திருத்த நீக்கம் பற்றி முக்கியமாகப் பிரஸ்தாபிக்கப்படும் எனத் தெரிகின்றது.

## லண்டனில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெடிக்கச் செய்திருக்கலாம் என இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த வருடம் நடைபெற்ற இரண்டாவது இராணுவ கட்டிடக் குண்டுவெடிப்பு இது வென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## 15 ஆம் திகதி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மலை, அம்பாறை, மட்டக்களப்பு போன்ற ஐந்து இடங்களில் எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறும். (தி)

## பொலிஸார்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிக்க பொலிசார் வரும்வரை முறையிட வந்த பொது மக்களை நிறுத்தி வைக்கின்றனர்.

வந்தவர்களும் பழைய பொலிசாரின் வரவுக்காக காத்திருந்த தமது முறைப்பாடுகளை தெரிவிக்க வேண்டியவர்களாக உள்ளனர். பொலிசாரோ தமது வேலைகள் அனைத்தையும் முடித்து விட்டு வருவதற்கு நீண்ட நேரம்பிடிக்கிறது. சிலவேளைகளில் பொலிசார் தமது கட்டில்களில் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதும் கவனிக்க கூடியதாக உள்ளது.

தப் போவதாகவும் கூறினார்.

இவருடன் இவ் விழாவிற்கு தொழிற்கல்வியின் மேலதிக பணிப்பாளர் ஏ.ரி. தர்மபிரியாவும் வந்திருந்தார். சிறப்பு விருந்தினராக மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. சண்முகநாதன் பங்குபற்றி தமது உரையின்போது இனி வரும் நாட்களில் வடபகுதிக்கு விஜயம் செய்யும் தூதுவராலய அதிகாரிகளை யாழ் தொழில்நுட்பக் கல்லூரிக்கு அழைத்து வந்து காட்டுவதாக உறுதிமொழி கூறினார். இதற்கு முன்னோடியாக எதிர்வரும் 17 ஆம் 18 ஆம் திகதியில் யாழ் மாவட்டத்திற்கு விஜயம் செய்ய உள்ள நோராட் ஸ்தாபன உயரதிகாரிகள் இங்கு அழைத்து வரப்படுப் படுவார்கள் எனவும் கூறினார்.

யாழ் தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் சி. இராஜேந்திரா தலைமையில் நடைபெற்ற இந் நூல் வெளியீட்டு விழாவில் தொழில் நுட்பக் கல்விப் பணிப்பாளர் நூலை வெளியிட்டு வைத்தார். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (அ)

## மக்கள்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னியாவில் உள்ள மற்றைய வங்கிக் கிளைகளில் இந்நிலைமை இல்லை என்றும் அந்தப் புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

## அமைச்சர்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமைகள் பற்றியும், விடுதலைப் புலிகளுக்கும், ஸ்ரீலங்கா இராணுவத்திற்கும் இடையில் நல்லுறவை ஏற்படுத்துவது சம்பந்தமாகவும் முக்கியமாக பேசப்படவுள்ளதாகவும் தெரிகின்றது.

## 2000 ஆண்டில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொருள் இராஜாங்க அமைச்சர் மேர்வின் ஜே. கூரே தெரிவித்துள்ளார்.

அநேகமாக இரண்டாயிரம் ஆண்டளவில் கிராமப் புறங்களுக்கு மின்சாரம் கிடைத்து விடும் என்றும் அமைச்சர் கூறினார்.

## வெள்ளை அரிசி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட உணவுப்பண்டங்களை உணவாகக் கொள்வதால் உதரநோய்களும், வாயிலும் வெடிப்புகள் ஏற்படுவதோடு கால்பாதங்களில் ஒரு வித எரிவும் ஏற்பட இடமுண்டு. அத்துடன் வயிற்றுக் கோளாறுகளும் ஏற்படுமாம்.

மில்லில் குத்திய அரிசியை விடக் கைக்குத்து அரிசி சிறந்ததென்றும், வெள்ளைச் சீனிக்குப் பதிலாக மக்கள் பனங்கட்டியைப் பாவிக்கலாம் என்று பியட்ரிஸ் டிமெல் விளக்கினார்.

தின் விடுதலைப் போராட்டம் முன்னெடுத்து வந்துள்ளன. புலிகள் தோன்றிய வரலாறு. புலிகள்முன்னெடுத்துச்சென்ற அரசியல் போராட்ட வரலாறுபோன்ற யதார்த்தபூர்வ வரலாற்றை ஆசிரியர்களான நீங்கள் கண்டுள்ளீர்கள் இதனை மாணவர்களுக்கு எடுத்து விளக்கவேண்டும்.

மாணவன் வீதியில் புத்தகத்துடன் செல்லுகிறான். அதே வீதியில் போராளி ஆயுதத்துடன் செல்கிறான். நாம் போராளிகளை உருவாக்குகின்றோம். ஆசிரியர்கள் மாணவர்களை உருவாக்குகின்றனர்.

யாழ் குடாநாட்டின் பாதுகாப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ள போராளிகள் மன்னார், திருக்கோணமலை, மட்டக்களப்பு வன்னி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணப்பகுதி போராளிகள் இங்கில்லை ஏன்? யாழ்ப்பாணப் பெற்றோர் நகைகளையும், காணிகளையும் அடகு வைத்து தமது பிள்ளைகளை வெளிநாடு அனுப்பியுள்ளனர்.

நான் பிரான்ஸ், ஜேர்மனி லண்டன் போன்ற இடங்களுக்குச் சென்றபோது இப்படிச்சென்ற பிள்ளைகள் அங்கே படும் பாடுகளை கண்டேன். அகதிமுகாம்களில் பிச்சைச் சாப்பாட்டை தின்று மிஞ்சும் பணத்தை வீட்டுக்கு அனுப்புகிறார்கள்.

டாக்டர்கள், பொறியியலாளர்கள் முதல் பலர் யாழ்ப்பாணத்திலிருந்து உருவாகின்றனர். லண்டனில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட யாழ்ப்பாணப் பகுதி டாக்டர்கள் உள்ளனர். எமது பகுதி ஆஸ்பத்திரிகளில் போதிய டாக்டர்கள் இல்லை. அவர்களை எம்மக்களுக்காக விடுமுறை நாளிலாவது வந்து தொழில் செய்யுமாறும் நாம் கேட்டிருந்தோம் ஆனால் பதில் இல்லை. இப்படியாக எமது எதிர்காலமாணவர்கள் நடக்கக்கூடாது.

பேச்சுவார்த்தை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அரசியல் சூன்ய நிலைபற்றி நாம் கொடுத்த ஒரு உந்துதலாலேயே மாகாண சபையைக் கலைக்க சட்டமூலம் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுகிறது! நாம் பொறுமையாகவும், அரசியல் தந்திரமாகவும் செயற்படுகிறோம். சிங்கள அரசுக்கும், சிங்கள மக்களுக்கும் ஒரு சந்தர்ப்பம் கொடுத்துள்ளோம் என்றார்.

## பாண்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆறுமாத கடுங்காவல் தண்டனையும் விதித்துள்ளது.

இதற்கு முன் பாகநிறை குறைத்து பாண் விற்பவர்களையோ அல்லது கூடிய விலைக்கு பாண் விற்பவர்களையோ தேடிப்பிடித்தால் அவர்களுக்கு கடும்தண்டனை வழங்கப்படும் என அரசாங்கம் அறிவித்திருந்தது.

லது மத்திய துணை நிலை இராணுவத்தின்கண்காணிப்பு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தமிழ் நாடு அரசின் கோரிக்கையை மத்திய அரசு ஏற்கவில்லை.

தமிழ் நாட்டுக் கடல் ஓரப் பகுதியில் அன்னிய தீவிரவாதிகளின் நடமாட்டம் எதுவும் இருக்கவில்லை என மத்திய அரசு கருதுவதே இதற்குக் காரணம் தமிழ்ப் போராளிகளின் நடமாட்டம் குறித்து பத்திரிகைகளில் வெளியான செய்தி பற்றி மத்திய அரசு விவாதம் நடத்தி அந்தச் செய்திகளில் கூறப்பட்டபடி தமிழகக் கடல் பகுதியில்

இந்திய அமைதி காப்புப் படையினர் திருப்பி அனுப்பப்பட்ட பின்னர் தமிழ் நாட்டு பாதுகாப்பு பற்றி மத்திய அரசு பரிசீலனை செய்து வருவதாகவும் ஆனால் பஞ்சாப் காஸ்மீர் போல் தமிழ்நாட்டில் பிரச்சினைகள்இல்லாதது அதிர்ஷ்டவசமானது என்றும் கூறினார்.

தமிழக அரசின் கோரிக்கை ஏற்கப்படாததற்கும் ஜம்மு, காஸ்மீர், பஞ்சாப், அசாம் ஆகிய மானிலங்களில் உள்ள பாதுகாப்பு நிலையும் ஒரு காரணமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

# வழி தவறிய சகோதரர்களை நெறிப் படுத்தியுள்ளோம்

## கைதிகள் விடுதலையில் பகீன்

(அரியாலை)

'' மாற்று இயக்கத்தினரின் வழி நடத்தலினால் வழி தவறிய எமது சகோதரர்களை நாம் இதுவரைகாலமும் எமது பாதுகாப்பில் வைத்திருந்து எமது போராட்ட நிலைகளை எடுத்து விளக்கி, அவர்களை மக்களாகிய உங்களுக்காகப் போராடக் கூடியவர்களாக மாற்றி, இன்று உங்கள் கைகளில் ஒப்படைக்கின்றோம்'' என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிஅரியாலைப்பிரதேசக் காரியாலயத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற கைதிகள் விடுதலை நிகழ்ச்சியில் தலைமைவகித்துப் பேசிய பொறுப்பாளர்பகீன் தமதுரையில் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் தமதுரையில் விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டு விடுதலைசெய்யப்படும் இவ்இளைஞர்களின் வரலாறு, இவர்களின் பெற்றோர்களாகியஉங்களை சமுதாயப் பழிச்சொல்லுக்குள்ளாக்காவண்ணம் திருத்தப்பட்டநிலையில் இவர்களை உங்களிடம் ஒப்படைக்கின்றோம். நீங்கள் இவர்களைக் கண்காணித்து, இவர்களை நல்ல முறையில் வளர்த்துச் சமுதாயவழிகாட்டிகளாக இவர்களை மாற்றுவது உங்களதுபொறுப்பாகும் என்றார்.

அடுத்து பொதுமக்கள் சார்பில் உரையாற்றிய ஆசிரியர் கணபதிப்பிள்ளை அவர்கள் தமதுரையில் '' இவ் இளைஞர்கள் யவன வயதில் இருக்கின்றார்கள். நன்மை, தீமை அறியாத இத்துடிப்பான வயதில் இவர்கள் ஒழுங்காகக் கவனிக்கப்பட்டால் இவர்களின் போராட்ட உணர்வு எமது சமுதாயத்தின் விடிவிற்கே வழிவகுக்கும். தவறான வழியில் திசை திருப்பப்பட்ட இளைஞர்கள் இன்று தம்பி பிரபாகரனின் கட்டுப்பாடு மிக்க ஓர் பாடசாலையில் இருந்தே வெளி வருகின்றார்கள். சிறையில் இருந்து வெளிவருவதாக நீங்கள் கருதக் கூடாது என்றார்.

இந்நிகழ்ச்சியில் பங்குபற்றிய ஆசிரியர் கமலநாதன் நேற்றுப் பிற்பகல் அரியாலைக் காரியாலயத்தில் வைத்து இருபத்தி ஒன்பது இளைஞர்களைப் பொதுமக்கள் முன்னிலையில் அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைத்தார்.

பெற்றோர் சமுகம் கொடுக்கத் தவறிய இளைஞர்களை விடுதலைப் புலிகள் பொறுப்பேற்று அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்புவதற்கு உரிய ஒழுங்குகளை மேற்கொண்டனர். (11

## சர்வகட்சி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

''சர்வகட்சி மாநாட்டில் ஈழவர் ஜனநாயக முன்னணி மட்டுமல்ல தன்மானமுள்ள தமிழ்ப் பிரதிநிதி எவரும் கலந்துகொள்வதில் அர்த்தமில்லை'' என்று நேற்றைய ஈழநாதம் தலையங்கம் கூறியிருந்தது தெரிந்ததே!

## புலிகளின்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாத நிலையில் காணப்படும் வீதிகள் விடுதலைப்புலிகளின் முயற்சியினால் வாகனங்கள் செல்லக்கூடிய அளவிற்கு திருத்தி அமைக்கப்பட்டு வருவதை மக்கள் பாராட்டுகின்றனர் (தி)

## திறமையற்ற

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிறார். ஒரு பாடசாலையின் விபரம் தெரியாதவர் எப்படி அதிபராக இருக்கமுடியும்.

ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் வேதனம் மிகக்குறைவே, சிற்றூழியனுக்கு கிடைப்பதே அவருக்கும் கிடைக்கிறது. இது மாறி முதற்தரமான இலக்கை அடைய வேண்டும் எனவும் குறிப்பிட்டார். வேறு பலரும் உரையாற்றினார்கள்.